
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

23




## ராஜீவின் எத்தனிப்புகள்!

படிப்பகம்

www.padippakam.com




மக்கள் கலை இலக்கியக் கழகம், தஞ்சைக் கிளை சார்பில் தோழமை அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் ஜெயசீலன், துரை மாணிக்கம் ஆகியோர்மீது போலீசு சோடித்த 'குடமுருட்டி வெடிகுண்டு' பொய் வழக்கு தோல்வியடைந்ததை மக்களிடம் விளக்க 29.9.88 அன்று தஞ்சையில் ஊர்வலம், பொதுக் கூட்டம் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தஞ்சை 'மாரிஸ் கார்னரி' லிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக காவேரி சிறப்பங்காடியை அடைந்தது. போலீசு உளவுப் படைப் பிரிவின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை — புரட்சிகர அரசியலை அடக்க நினைக்கும் அறிவீனத்தை அம்பலப்படுத்தி எழுச்சியுடன் தோழர்கள் முழக்கங்களிட்டனர்.

பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஜெயசீலன், துரைமாணிக்கம் ஆகியோர், போலீசு சோடித்த பொய்வழக்கின் விவரங்களையும் கையாண்ட சதிகளையும் விளக்கிப் பேசினர். இவ்வழக்கை நமது சார்பில் நடத்திய இளம் வழக்குரைஞர் திரு. டி. எஸ் செல்வராஜ், மூத்த வழக்குரைஞர் திரு. எஸ்.என். இராமசாமி ஆகியோர் இந்த வழக்கின் கொடூரத்தன்மையையும், அரசியல் எதிரிகளை ஒடுக்க காவல் துறை எடுக்கும் இழிவான செயல்களையும் சிறப்பாகவிளக்கினர். இதுபோன்ற வழக்குகளில் ஒடுக்கப்படுவோர் பக்கம் நிற்க வேண்டியது, உழைக்கும் மக்களின் கடமை என்றும் குறிப்பிட்டனர்.

விவசாயிகள் விடுதலை முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம் போன்ற அமைப்புகள் ஊர்தோறும் வேர்விட வேண்டும் என்ற தங்களது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

வழக்குரைஞர்களுக்கு, தோழர்கள் புதிய ஜனநாயகத்தின் வெளியீடான 'மாவோ மேற்கோள்கள்' என்ற நூலை நினைவுப் பரிசாக வழங்கினர்.

தஞ்சை மகஇக செயலர் தோழர் காளியப்பன், அதிராம் பட்டினம் புதிய கலாச்சார வாசகர் வட்ட தோழர் சிவாஜி ஆகியோர் பொய் வழக்குகளால் புரட்சியை—புரட்சிகர அமைப்புகளை—தடுக்க முடியாது என்று சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தின் இறுதியில் மகஇக கலைக்குழுவின் புரட்சிகரக் கலைநிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

●

30 9.88ல் விவிமு திருவையாறு ஒன்றியம் சார்பில் போலீசாரால் ஜோடிக்கப்பட்டு சாயம் வெளுத்த குடமுருட்டி குண்டு பொய் வழக்கு விளக்கப் பொதுக் கூட்டம் திருக்காட்டுப் பள்ளியில் நடைபெற்றது. தோழர் ஜெயசீலன் தலைமையேற்க, தோழர்கள் துரைமாணிக்கம் (திருவோணம், விவிமு), காளியப்பன் (மக இக, தஞ்சை), பழனிவேல் (விவிமு திருவையாறு) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். முந்நூறு பேர் கூடிய அக்கூட்டத்தின் இறுதியில் மகஇக-தமிழ்நாடு கலைக்குழு வழங்கிய புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்வழக்கு உட்பட பொதுவாக போலீசார் ஜோடிக்கும் பொய் வழக்குகளை தோழர்கள் அம்பலமாக்கினர். மக்கள் திரளாக வந்து ஆதரவளித்தனர். 27.9.88, 29.9.88, ஆகிய தேதிகளில் ஊரணிபுரம், தஞ்சை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டங்களின்தொடர்ச்சியாக இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது.

# போஸ்டரை கிழிக்கும் போலீசு படைகள்



கழுதைமட்டும்தான் காகிதத்தை தின்னும் என்று நினைக்கிறீர்களா? இதோ காக்கிச் சட்டை போட்ட போலீசு மிருகங்களும் காகிதத்தை ஓடி ஓடி தின்கிறதே! அதிலும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் போஸ்டர்கள் என்றால்அதற்கு மிகவும் விருப்பம் போலத் தெரிகிறது.

அண்மையில் தமிழகத்துக்கு வந்திருந்த பிரங்கித் திருடன் ராஜீவை இனம் கண்டு கொள்ளுங்கள் என்று உணர்த்துகின்ற வகையில் 180 போஸ்டர்கள் எழுதி கம்பம் பேருந்து நிலையத்தில் ஒட்டினோம். நாங்கள் வேலை முடித்து வந்த சில மணி நேரங்களுக்கு பின்னால், ஆங்காங்கே பேருந்துகளை நிறுத்தி வாளியிலே தண்ணீரை எடுத்துக் கொண்டு ஓட்டப்பட்ட போஸ்டர்களை எல்லாம் போலீசு கும்பல் கிழித்தது. அதன் பக்கத்திலேயே ஒட்டப்பட்டிருந்த போலிக் கம்யூனிஸ்டுகளின் கறுப்புக் கொடி ஆர்பாட்ட போஸ்டரை மட்டும்தொடவேயில்லை.

ஆம்! 'எதிரி நம்மை தாக்குகிறான் என்றால் நாம் சரியாக இருக்கிறோம்' என்று தோழர் மாவோ சொன்னது எவ்வளவு சரியானது! அந்த உற்சாகத்துடன் போலீசின் போஸ்டர் கிழிப்பை பொது மக்களிடம் அம்பலப்படுத்தி பிரச்சாரம் எடுத்தோம். புரட்சிகர அமைப்புகளின் அரசியல் உறுதியை பகுதி மக்களிடம் பசுமரத்தாணிப் போல் இப்பிரச்சாரம் பதிய வைத்தது.

ஒட்டப்பட்ட வாசகங்கள்: சுவிட்சர்லாந்திலே அமிதாப், அஜிதாப்பை அறிமுகப்படுத்தி, தமிழகத்திலே நிலத்திருடன் மூப்பனாரை அறிமுகப்படுத்த வரும் பீரங்கி திருடன் ராஜீவே திரும்பி போ! எலியைப் பிடிக்க தேங்காய் சில்லு வைக்கிறாங்க! ஏழையை ஏய்க்க தேர்தல் வைக்கிறாங்க! தமிழக மக்களை ஏய்க்க ராஜீவ் அடிக்கடி வர்ரானுங்க! தமிழக மக்களே உஷார்! உஷார்!

இவண்,
விவசாயிகள் விடுதலைமுன்னணி,
உத்தம்பாளையம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

23

16—31 அக்டோபர் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1.50
ஆண்டு சந்தா : ரூ. 36

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
ஆண்டு சந்தா : ரூ 170

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

ஈழத்தேர்தல்கள்

# வடக்கில் போலித்தனம்! கிழக்கில் ரத்தக்களறி!

கடந்த பதினைந்து நாட்களில், பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல்களின் பித்தலாட்டம், கோழைத்தனம், ரத்தவெறி ஆகியன மீண்டும் மிகவும் அம்மணமாக அம்பலப்பட்டுள்ளன. இக்கொடிய கும்பல்களுக்கு எதிராக இலங்கைத் தமிழ்—சிங்கள மக்களின் வெறுப்பும் ஆத்திரமும்கூட கூர்மையாக வெளிப்பட்டுள்ளன.

உலகிலே வேறு எங்கும் நடவாத போலித்தனமான ரத்தக்களறியான தேர்தல்களை ஈழத்தில் பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல்கள் நடத்துகின்றன. ஆனால் ஈழத்தேர்தல்கள் திட்டமிட்டபடி, மிகவும் ஜனநாயக பூர்வமாக, வெற்றிகரமாக நடத்தப்படுவதாக அவர்கள் பசப்புகின்றனர். "இலங்கையின் வடமாநிலத்தில் ஈபிஆர்எல்எஃப், ஈஎன்டிஎல்எஃப், ஆகிய ஈழப்போராளிக் குழுக்கள் 36 தொகுதிகளில் போட்டியின்றி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் தகுதியில் உள்ளன. கிழக்கில் உள்ள 35 தொகுதிகளுக்கு ஈ பி ஆர் எல் எஃப், ஆளும் யு.என்.பி மற்றும் முஸ்லீம் காங்கிரசு ஆகியன போட்டியிடுகின்றன. அடுத்த மாதம் 19ந் தேதி நடக்கும்தேர்தல்களுக்குப்பிறகு மாகாண நிர்வாகம்—ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த முடிவு ஏற்கனவே ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல்கள் ஈழத துரோகிகளுடனும், முஸ்லீம் காங்கிரசு மற்றும் ஐக்கிய சோசலிசக் கூட்டணியுடனும் நடத்திய பேரம்—ஏற்பாட்டின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருந்தது. "ஒரு கட்சி மட்டுமே வேட்பாளர்களை நிறுத்தினால் வாக்கெடுப்புக்கு அவசியமிராது. இது, தேர்தலுக்காகக் களப்பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய இந்திய அரசாங்கமும், நிர்வாக ஏற்பாடுகள் செய்ய வேண்டிய இலங்கை அரசாங்கமும் சந்திக்க இருக்கும் பல பிரச்சினைகளை அகற்றிவிடும். 35 தொகுதிகள் உள்ள கிழக்கு மாநிலத்தில் ஈபிஆர் எல்எஃப், ஆளும் யுஎன்பி, ஐக்கிய சோசலிச கூட்டணி மற்றும் முஸ்லீம் காங்கிரசு ஆகியன வேட்பாளர்களை நிறுத்தலாம். எனவே போட்டி இருக்கும்"என்று வேட்புமனுதாக்கலுக்காக குறிப்பிட்ட தேதிக்கு முன்தினமே (அக்' இந்து) எழுதியது.

இலங்கைத் தேர்தல்களில் இந்தியா தலையிடாது என்று புளுகினாலும் இந்தியத் தூதர் தீட்சித் தலைமையில் இந்திய உளவுப் படையான "ரா" நேரடியாக பேரம் நடத்தி இந்த தேர்தல் மோசடியை அமுலாக்கி வருகிறது. ஏற்கனவே முடிவான ஏற்பாட்டை செயல்படுத்துவதில் எழுந்த குளறுபடிகளே அதை அம்பலமாக்கிவிட்டன. முதல் ஐந்து நாட்கள் வேட்பு மனுவைப் பெறும் கச்சேரிகளே திறக்கப்படவில்லை. கச்சேரிக்குப் பொறுப்பான அரசு ஏஜெண்டுகள் அஞ்சி மறுத்துவிடவே கொழும்பிலிருந்து விமானம் மூலம் அதிகாரிகளையும், வேட்பாளர்களையும் கொண்டு வந்து இந்திய இராணுவம் புடைசூழ வேட்பு மனு தாக்கல் சடங்கு முடிந்தது. வடமாநிலத்தில் போட்டியின்றி தேர்தல் தீர்மானம் செய்வது ராஜீவ் -ஜெயவர்த்தனே கும்பல் முடிவு. எனவே மன்னாரில் முஸ்லீம் காங்கிரசு செய்த வேட்பு மனுக்களை அடியோடு நிராகரித்து விட்டனர். "போட்டியின்றி தேர்வு முடிவாகிவிட்டது. எனவே வேட்பு மனு தாக்கல் கிடையாது." என்று அதிகாரி மறுத்துவிட்டார் (அக் 10 இந்தியப் பத்திரிக்கைகள்) "கடைசி நாள்வரை தேர்தலில் போட்டியிட மறுத்த முஸ்லீம் காங்கிரசு வேட்பாளர்களை இந்திய இராணுவ விமானங்கள் மூலம் கொண்டுபோய் கடைசி நேரத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய வைத்தனர் (இந்து, அக் 11) அமிர்தலிங்கம் தலைமையிலான துரோகக் கும்பலை நிறுத்த "ரா" செய்த முயற்சிகள் அதன் பயபீதியினால் தோற்றுப் போகவே, வடக்கில் ஆதரவு இல்லாத ஈபிஆர் எல்எஃப் துரோகக் கும்பல் நிறுத்தப்பட்டது. புலிகளின் இதயம் போன்ற யாழ் தீபகற்பகத்தில் 'ஈபிஆர் எல்எஃப் போட்டியின்றி வெற்றி பெறலாம்." (இந்து அக் 11) என்று மனுக்கள் தாக்கல் செய்த அன்றே எழுதியது.

இப்படித் போலித்தனமான தேர்தலில் வெற்றி பெற்ற மமதையில் இப்போதே தமது ஆட்சியின் இலட்சியங்களை அறிவித்துவிட்டது ஈபிஆர் எல்எஃப் துரோகக் கும்பல். ஈழத்தில் அமைதியை நிலை நாட்டுவதும், புலிகளின் தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாப்பதும்தான் அதன் உடனடிப் பணியாம். ஈழத்தின் சட்ட ஒழுங்கு பிரச்சினைகளைக் கவனிக்க ஒரு பிராந்தியப் போலீசுப் படையை உருவாக்குவதற்காகததான் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டியுள்வது என்று பாசிச ராஜீவ் கும்பல் திரும்பத் திரும்பக் கூறுகிறது. பாதுகாப்புக்கு ஆயுதங்களைத் தரும்படி ஈபிஆர் எல்எஃப் கும்பல் கோருகிறது. புலிகளிடமிருத்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஈழ துரோக கும்பல்களுக்கு வழங்கப்படும் என்று (இந்து அக் 11) தெரிகிறது.

ஈழப் போராளிகளைப் பிளவுபடுத்தி, ஈழத்தில் ஒரு பொம்மை அரசை நிறுவி, ஈழத்தமிழர்களைத் கொண்டே ஈழத்தமிழர்களைக் கொல்லும் பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே சதியின் அடுத்த கட்டம்தான் இது! ஆக்கிரமிப்பு அமெரிக்க ஏகாதிபத்தியம் பின்பற்றிய "வியத்நாமிய மயமாக்கும்" திட்

படிப்பகம்

www.padippakam.com


டத்தின் ‘‘காப்பி’’தான் இது. ‘‘வியத்நாமிய மயமாக்கும்’’ திட்டத்தினால் வரலாற்றுமுடிவை ஏகாதிபத்தியத்தினால் மாற்ற முடியவில்லை. அதே சதிதான் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் ஏற்படும்.

எப்படியும் ஈழத்தேர்தல்களை நடத்தி விடுவது என்கிற பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பலின் மூர்க்கமான முடிவினால் ஈழத்தில் ரத்தக்களறியேற்படுவது தவிர்க்க முடியததாகி விட்டது. பத்மநாபா, வரதராஜப் பெருமாள் போன்ற துரோகிகள்-அழித்தொழிக்கப் படுவார்களானால் அதற்காக தமிழர்கள் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட சிந்த மாட்டார்கள். அனுதாப நிழல்கூட தோன்றாது. ஆனால் ஈழத்தேர்தல்களை ஒட்டி அப்பாவி சிங்கள—தமிழ் இன சிவிலியன்கள் படுகொலை செய்யப்படுவது வேதனைக்குரியது. ஏற்கனவே அது துவங்கிவிட்டது. ஏற்கனவே இந்திய ஆக்கிரமிப்புக்குஎதிராகப் போராடும் சிங்களர்களின் போராட்டம் தீவிரமாகியுள்ளது. தென்னிலங்கையில் தொடர்ந்து வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. மக்கள் விடுதலை முன்னணியின் தனிநபர் பயங்கரவாதம்மட்டுமல்ல, மக்கள்திரளின் போர்குணமிக்க போராட்டங்களும் வெடிக்கின்றன. எனவே இனவெறி—இனக்கலவரங்களைத் திட்டமிட்டு தூண்டும், ஆத்திரமூட்டும் உளவுப்படைகளின் சதிகளை முறியடித்து, ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடும் அனைத்து சக்திகளுடன் ஐக்கியப்படுவது போராளிகளின் கடமையாகும்.

●

ஈழப்போரில் படுகாயமுற்று சிகிச்சைக்காகத் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்த ஈழப்போராளிகள் 200பேரை தேசியப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைந்திருந்தது பாசிச ராஜீவ் கும்பல். இதற்கெதிரான போராளிகளின் போராட்டம்—சவால் பாசிச ராஜீவ்கும்பலின் கோழைத்தனத்தை அம்பலப்படுத்தி விட்டது. கைதான பிறகு விசாரணை கமிட்டிகள் முன்பு கிரிமினல் குற்றவாளிகளைப் போல போராளிகளுக்கு கைவிலங்கிட்டு இழுத்து வந்தது. அதற்கெதிராகப் போராளிகள் ஆவேசம் கொண்ட போது விலங்குகளை அகற்றியது.

‘‘போராளிகள் குற்றம் எதுவும் செய்யவில்லை. குறிப்பான குற்றங்கள் செய்ததாக கருதினால் விசாரித்து தண்டனை கொடு! இல்லையேல் விடுதலை செய்து ஈழத்திலுள்ள எங்கள் தோழர்களிடம் கொண்டு போய் விடு! இல்லையேல் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்போம்!’’ என்று ராஜீவ்கும்பலுக்கு எச்சரிக்கைவிட்டார் போராளி கிட்டு. அதற்கு பதிலளிக்க திராணியற்ற பாசிச ராஜீவ் கும்பல் சனிக்கிழமை நள்ளிரவு பெரும்போலீசுப் படையை ஏவியது. சிறைக் கதவுகளைக் திறந்து விடுதலை செய்வதாகப்புளுகியது. அவர்கள் வெளியே வந்ததும்விலங்கு மாட்டி லாரிகளில் ஏற்ற முயன்றது. விலங்கு மாட்டக்கூடாது! ‘‘சைனைடு’’ நஞ்சுண்டுசாவோம்! என்றுபோராளிகள்எதிர்த்தபோது பயந்துபின் வாங்கின போலீசு நாய்கள். பின்னர் பெரும்படையை கொண்டு லாரிகளில் ஏற்றியது. இரவோடு இரவாக் ஆறுவிமானங்கள் மூலம் யாழ் மற்றும் திரிகோணமலை இராணுவ முகாமுக்குக் கடத்திப் போய் சிறையிலடைத்தது. போராளிகளை விடுதலை செய்யாவிட்டால் அவர்கள் உண்ணாவிரதம் துவங்கினால் தமிழ் நாட்டில் ‘‘கலகம்’’ வெடிக்கும் என்றஞ்சிய பாசிச ராஜீவ் கும்பல் இப்படி நாடு கடத்தியது. ஆனால் ‘‘போராளிகள் விருப்பப்படி அவர்களுடைய தாயகத்துக்கு அனுப்பப்பட்டார்கள்’’ என்று இந்திய பத்திரிக்கைகளும் அரசுஊது குழல்களும் புளுகுகின்றன.




பதவி ஆசையால் தன்மீது ஜெயவர்த்தனே சவாரி செய்வதற்கு அமிர்தலிங்கம் கும்பல் ஒப்புக் கொள்வதாக ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்கு முன்பு ஈ.பி.ஆர்.எல்.எப் தனது ‘ஈழப் போராளி’ பத்திரிக்கையில் வரைந்த கேலிச்சித்திரம். இப்போது பதவி ஆசைக்காக ராஜீவ் - ஜெயவர்த்தனே இருவருமே சவாரி செய்வதற்கு முதுகைக் கொடுக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எப் துரோகக் கும்பல்.



படிப்பகம்

www.padippakam.com

பிதார்:

# சீக்கியர்கள் படுகொலை சிவசேனை அக்கிரமம்!



பிதார் குருத்துவாரா: சிவசேனை குண்டர்கள் தீக்கிரையாக்கிய ஸ்கூட்டரில் சீக்கியர்களின் குழந்தைகள்

பிதார். கர்நாடக மாநிலத்தின் வடமேற்கே ஆந்திரமாநில எல்லையின் அருகிலுள்ள ஒரு சிறுநகரம். ஒரு லட்சம் மக்கள் தொகைக் கொண்ட இச்சிறுநகரத்தில் 2000க்கும் குறைவான சீக்கிய மக்கள் நிரந்தரமாக வசிக்கிறார்கள்.

சீக்கியர்களின் மதநம்பிக்கைபடி குருநானக்கின் காலடிப்பட்ட இவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கும் மத முக்கியத்துவம வாய்ந்த குருத்துவாரா அறக்கட்டளையின் கீழ் பல்வேறு கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன. இந்திரா சாவின் போது அரங்கேற்றப்பட்ட சீக்கிய படுகொலைக்கு பிறகு, வடமாநிலங்களில் உள்ள பெரும்பாலான சீக்கியர்கள் பாதுகாப்பு கருதி தங்கள் பிள்ளைகளை கல்வி பயில இங்கு அனுப்புகின்றனர். இந்துமத வெறியர்கள் இந்தியா முழுவதும் விரவியிருக்கிறார்கள் என்பதை ஏனோ அவர்கள் மறந்துவிட்டார்கள்.

செப்டம்பர் 14ந்தேதி மாலை நேரம். கடைவீதியில் சிற்றுண்டி கடையின் முன் குழுமியிருந்த சீக்கிய மாணவர்களிடம், அந்நகரத்தில் புதிதாக கிளம்பியிருக்கும் சிவசேனை இந்துமதவெறி கும்பல் வினாயக சதுர்த்தி கொண்டாட்டங்களுக்கு நிதி தரும்படி நிர்பந்திருக்கிறது. மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே நிதி கொடுத்திருப்பதாகவும் அதற்கு அத்தாட்சியாக ரசீதுகளையும் காட்டி திரும்பவுமதர இயலாது என கூறியிருக்கிறார்கள். ஆத்திரம் அடைந்த கும்பல் கருவிக்கொண்டே திரும்பியது.

'பிழைக்க வந்த சீக்கியனுக்கு இவ்வளவு திமிரா?''—வெறியேறிய சிவசேனை குண்டர்கள் கும்பல் தொடர்ந்து மூன்று நாட்கள் திட்டமிட்டு சீக்கியர்களை நரவேட்டையாடியது. சீக்கிய குடும்பங்களின் வீடுகள், கடைகள், கல்வி நிறுவனங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. 6 சீக்கிய மாணவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானமாணவர்கள் ரத்தம் சொட்ட சொட்ட அடித்து விரட்டப்பட்டனர்.

தப்பிப் பிழைத்த சீக்கியர்களும் பீதியடைந்து ஊரைவிட்டே ஓடுமளவுகொலைகளும், சூறையாடல்களும் குரூரமான முறையில் நடத்தப்பட்டன.

கலவரத்துக்கு அஞ்சி அண்டை நகரத்துக்கு ஓடிய மாணவர்கள் கூட்டத்தைகூட சிவசேனா கும்பல் விடாமல் துரத்தியது. 6 மாணவர்களை சுற்றி வளைத்து நட்ட நடுவீதியில் கத்தியால் கிழித்துக் கொன்றது. ஒரு சீக்கிய மாணவரை மரம் அறுக்கும் இயந்திரத்தில் விட்டு குரூரமாக சீவிக் கொல்ல முயற்சித்தது. தற்செயலாக மின்சாரம் தடைப்பட்டு விடவே, திரும்பவும் அம்மாணவரை ஓடும் ஸ்கூட்டரில் கட்டி இழுத்துச் சென்று குற்றுயிராக சாலையோரத்தில் வீசியது.

இந்திரா சாவின்போது டெல்லியில் சீக்கிய குடும்பங்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அதே குரூரம், அதே மாதிரியான கொலைவெறி! கொலைவெறி கும்பலிடம் இருந்த இரும்பு தடிகளும், உருட்டு கட்டைகளும் கூட டில்லி படுகொலையில் பயன்படுத்தியது மாதிரி ஒரே அளவில் சீராக இருந்தது. இந்துமத வெறி கும்பல் மையப்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியில், இந்தியா முழுவதும் வலைப்பின்னல் அமைப்போடு திட்டமிட்டு வளர்க்கப்படுகிறது என்பதை இது நிரூபிக்கிறது.

கர்நாடக போலீசின் செயல் கூட டில்லி போலீசின் அச்சாகவே இருந்தது. கலவரத்தை கட்டுபடுத்துவதாகக் கூறிசீக்கிய மாணவர்களின் மீது மட்டுமே தடியடி நடத்தியது. கண்ணீர் புகை குண்டுகள் வீசியது. நடுத்தெருவில் அல்ல, சீக்கிய கல்வி நிறுவனங்களுக்கு உள்ளே சென்று இவ்வளவையும் செய்தது.

பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தவுடன், கீழ்மட்ட போலீச அதிகாரிகள் இடமாற்றம், விசாரணை கமிஷன், ஈட்டு தொகை நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

நடந்த கொடூரங்களை நியாயப்படுத்துவதற்கு கேலிக்குரிய காரணங்களை முன் வைக்கிறது, இந்து மதவெறி காங்கிரசு கும்பல். 'சீக்கிய மாணவர்கள் மோட்டார் பைக்குகளில் திரிந்துக் கொண்டு பகுதியில் இருக்கும் இளமபெண்களை கிண்டல் செய்துக் கொண்டிருந்ததால், சமயம் பார்த்து மக்கள் பழித்தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்கிறது. இது பொய் என்று நாம் வாதாட வரவில்லை. பெரும்பாலான நகர இளைஞர்களிடம் குடிக்கொண்டிருக்கும் இந்நோய்க்கு பிதார்நகரத்தில் பெரும்பான்மையாக இருக்கும் இந்துமத இளைஞர்கள் மட்டும் விதிவிலக்கா என்ன?இவர்களில் எவர் ஒருவரும் மக்களின் கோபத்திற்கு ஆளாகவில்லையே ஏன்? உண்மையில், பிதார் படுகொலைகளுக்கு சிவசேனா குண்டர்களான, இந்துமத வெறியர்களும்; இவர்களை பாதுகாக்கும் ஆட்சியதிகார கும்பலான காங்கிரசும் ஜனதாவும்தான் காரணம். இந்திரா வழியில் இவர்களும் மிக விரைவில் தண்டிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி. ●



படிப்பகம்

www.padippakam.com



# மூப்பனாரின் தேர்தல் 'சாணக்கியம்'

## சாதிக்கலவரங்கள் அரங்கேற்றம்!

பாசிச ராஜீவ் கும்பலின் தமிழ்நாட்டுப் பிரதிநிதி, கபிஸ்தலம் பண்ணை கருப்பையா மூப்பனார். இவர் மீண்டும் தமிழ்நாட்டில் காங்கிரசு ஆட்சியை—காமராஜர் ஆட்சியை அமைப்பதற்காக பல சாணக்கியத் தந்திரங்களில் ஈடுபட்டுள்ளார்.

அவை ஏதோ, கடந்த இருபது ஆண்டுகளாக ஆட்சியிலிருந்து, அதிகார எச்சிலை ருசிபார்த்து கோடி கோடியாகக் கொள்ளையடித்த எம்ஜிஆரின் வாரிசுகளும் அவர்களுடைய பங்காளிகளான கருணாநிதியின் உடன் பிறப்புகளும் அக்கறைப்பட வேண்டிய விவகாரங்கள் என்று ஜனநாயக உணர்வு உடையவர்கள் ஒதுங்கிவிட முடியாதவை.

அவை ஏதோ ஓட்டுப்பொறுக்கிகளின் அரசியல்தில்லுமுல்லுகள், பதவிச் சண்டை என்று புரட்சிகர உணர்வுடையவர்கள் ஒதுக்கித் தள்ளிவிட முடியாதவை.

ஏனெனில், ஆட்சியைப்பிடிப்பதற்காக மூப்பனார் கையாளும் சாணக்கியத்தனங்கள், அவற்றின் விளைவுகள் தலைமுறை தலைமுறைக்கும் தமிழக மக்களைப் பாதிக்கக் கூடியவை. பாசிச ராஜீவைக் கொடை வள்ளலாகக் கருதி, அவர் வீசி எறியும் பிச்சைக் காசுக்காகக் கையேந்தி நிற்கும் பரம ஏழைகளாக தமிழக மக்களை காட்டும் கவர்ச்சி நாடகங்களை அரங்கேற்றுகிறார். மூப்பனார் விட்டெறிந்த எலும்புத் துண்டுகளைக் கவ்விக் கொண்டு, பாசிச ராஜீவின் பின்னே வாலாட்டிக் கொண்டு திரியும் ஒரு பத்திரிகையாளர் கும்பலை உருவாக்குகிறார்; அவர்கள் ராஜீவுக்கு "லாலி" பாடுவதையே பத்திரிக்கைப் பணியாகக் கொண்டு திரிகிறார்கள்; அடியும் வேரும் இல்லாத உலக்கைகளை, மக்கள்—அணிகள்—கொள்கைப் பற்று எதுவுமே இல்லாத பிழைப்புவாதிகளான பார்ப்பன, சினிமா பிரபலங்களைத் தலைவர்களாக்குகிறார்.

போகட்டும்; இவை ஓட்டுப் பொறுக்கிகளின் தேர்தல் தந்திரங்கள்தாம் என்று சொல்லலாம். **ஆனால் இவற்றோடு வேறொரு அரசியல் சூதாட்டத்திலும்—அரசி**யல் அயோக்கியத்தனத்திலும் இறங்கியுள்ளார் கருப்பையா மூப்பனார்—காமராஜரின் வாரிசு. தமிழகமெங்கும் சாதி, மதவெறி பகைமை, கலவரத்தைத் தூண்டும் நச்சு விதையைத் தூவி நீரூற்றி வளர்க்கிறார். அதன் விளைவாக தமிழக மக்கள் ஒருவரை ஒருவர் வெட்டி மாய்த்துக் கொள்வார்கள்; அவர்களின் ரத்தம் குடித்துப் பதவிப் பசியாறலாம்; அவர்களின் பிணங்களின் மீதேறி பதவிக் கட்டிலில் அமரலாம் என்று துடிக்கிறார் கருப்பையா மூப்பனார்—காமராஜரின் வாரிசு. அதற்கு முழு ஆசியும், அரசு உதவியும் அளித்து மூட்டை மூட்டையாக கள்ளப் பணம்—கருப்புப் பணத்தை மடியில் கட்டிவிட்டும் அனுப்பியிருக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

### தமிழகத்தில் காங்கிரசு ஆட்சி ராஜீவ்—மூப்பனார் பேராசை

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதும் ஆட்சியைப் பிடிப்பதும் பாசிச ராஜீவ் கும்பலுக்கு மிகவும் முக்கியமானது—அவசியமானது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கு வங்கம், கேரளா, அரியானா மற்றும் பிற இடைத் தேர்தல்களில் அடுத்தடுத்து தோல்வியையே கண்டு வந்திருக்கிறது. ஆயுத பேர ஊழல்களால் மதிப்பிழந்து தனிமைப்பட்டு நிற்கிறது. ஈழ ஆக்கிரமிப்புப் போரில் விடுபட முடியாமற் சிக்கிக் கொண்டுள்ளது. இந்தச் சரிவுகளுக்கு முட்டுக் கொடுக்கவே தமிழக சட்டமன்றத் தேர்தலில் ராஜீவ் கும்பல் வெற்றிபெற எத்தனிக்கிறது.

குறிப்பாக, தெற்கு ஆசிய பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக பாசிச ராஜீவ் கும்பல் தொடுத்துள்ள ஈழ ஆக்கிரமிப்புக்குப் பின்னிலமாக இருந்து செயல்பட தமிழ்நாட்டில் அதன் ஆட்சி அவசியமாக உள்ளது. இதனால் காங்கிரசு பாரம்பரியத்தில், காந்திய வழியில் அது திரட்டியுள்ள எல்லா அனுபவங்களையும், எல்லா வசதிகளையும் கொட்டி மூப்பனாரைக் களத்தில் இறக்கிவிட்டுள்ளது. கருப்பையா மூப்பனாரோ, தனது அரசியல் குரு காமராஜரிடம் கற்றுக் கொண்ட கட்டைப் பஞ்சாயத்து-நாட்டுப்புற சாதிய அரசியல் அனுபவங்களை பாசிச ராஜீவ் கும்பலின் நவீன உத்திகளோடு கலந்து பல சாணக்கியத்தனங்களைச் செய்கிறார்.

காகிதப்பூ மணக்காது, காங்கிரசு சோசலிசம் பலிக்காது என்று கண்டுகொண்டு தமிழக மக்கள் காமராஜரின் சாதிய அரசியலைச் சவக்குழிக்கு அனுப்பினார்கள். பக்தவத்சலத்தின் அடாவடித்தன—அதிகார திமிர்மிக்க ஆட்சிக்கு முடிவுகட்டினார்கள். அதன் பிறகு கடந்த இருபது ஆண்டுகளாக காங்கிரசு தலை தூக்கவே முடியவில்லை. ஆனாலும், மத்திய அரசின் ஒடுக்குமுறை அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டது; கருணாநிதி—எம்ஜிஆர் லஞ்ச ஊழல்களையே அதற்கான ஆயுதமாகக் கொண்டு உருட்டி மிரட்டியது; விசாரணைக் கமிஷன், ஆட்சிக் கலைப்பு மிரட்டல்களை வைத்தே கருணாநிதி, எம்ஜிஆர் தோல்மீது ஏறி சவாரி செய்தது, காங்கிரசு.

இதனால் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் தனது செல்வாக்குக்குமீறிய இடங்களைப் பெற முடிந்தது. தமிழ்நாட்டில் தனது ஆதிக்கத்தை அமுலாக்க முடிந்தது. காங்கிரசு அடியோடு ஒழிந்து போகாமல் உயிரைக் காப்பாற்றி வந்தது. ஆனாலும் தனது நேரடி ஆட்சியை நிறுவுவதற்கான நேரத்தை எதிர்பார்த்து அந்த நப்பாசையிலேயே காத்துக் கிடந்தது. எம்ஜிஆர் நான்காண்டுகளுக்கு முன்பு மரணப் படுக்கையில் வீழ்ந்த போதும், அதன் பிறகு நடைபிணமாக இருந்து ஆட்சி நடத்தியபோதும் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி அதிகாரத்தைப் பிடிக்கத் தொடர்ந்து சதிவேலைகள் செய்து பார்த்தது. எம்ஜிஆர் சாவுக்குப் பிறகு ஆட்சியைப் பிடிக்கும் காங்கிரசின் ஆசை, வெறியானது. எம்ஜிஆர் கட்சியைப் பிளந்து, ஒரு பிரிவை விலைக்கு வாங்கித் தனது ஆட்சியை நிறுவ எத்தணித்தது, பாசிச ராஜீவ் கும்பல். பண்ருட்டி ராமச்சந்திரன் அந்த அரசியல் விபச்சாரத்துக்குத் தரகனாக இருந்தார். ஆட்சியைப் பிடிக்கத் தவறினாலும் பண்ருட்டியைக் கொண்டு எம்ஜிஆரின் வாரிசுகளைப் பிளவுபடுத்தி சிதறடிக்கும் முயற்சியில் காங்கிரசு வெற்றி பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சதிகளுக்குத் தலைமையேற்று நடத்தவும், காங்கிரசு ஆட்சியை 'நிறுவவும்' இரண்டு முக்கிய புள்ளிகளைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பியது பாசிச ராஜீவ் கும்பல். ஒருவர், மாநில அரசு அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி காங்கிரசுக்கு செல்வாக்குத் திரட்டுவதற்காக—கவர்னர் அலெக்சாண்டர். மற்றொருவர், காங்கிரசைத் தூக்கி நிறுத்தி உசுப்பிவிட்டு தேர்தல் களத்தில் இறக்குவதற்காக— பண்ணையார் கருப்பையா மூப்பனார்.

நாடாளுமன்ற ஜனநாயக 'மரபுப்படி' அவர்கள் தமது இலட்சியம், கொள்கை, திட்டத்தைச் சொல்லி ஆதரவு திரட்டலாம். இல்லை, திராவிடக் கட்சிகளிடம் பாடம் கற்றுக் கொண்டு கவர்ச்சி காட்டி, பொறுக்கி அரசியல் நடத்தி ஆட்சிக்கு வரலாம். அல்லது பிணத்தைக் காட்டி ஒப்பாரி வைத்து, அனுதாப அலையை எழுப்பி ஆட்சிக்கு மிதந்து வரலாம். ஆனால் புறக்கடை வழியாகவே அதிகாரத்தைப் பிடிப்பது என்கிற காங்கிரசு பாரம்பரியம்—காந்தீய வழியைத் தான் வழக்கம் போல ராஜீவ்—மூப்பனார் கும்பல் முக்கிய தேர்தல் உத்தியாகத் தெரிவு செய்து கொண்டுள்ளது.

## காங்கிரசு பாரம்பரியம்: சாதி, மத அரசியல் புறக்கடை வழி

தேசிய ஒருமைப்பாடு, ஜனநாயக சோசலிசம், வறுமை ஒழிப்பு, காந்தியப் பாரம்பரியம்—இவை ஓட்டுப் பொறுக்குவதற்காக வெளியே சொல்லும் காங்கிரசு இலட்சியம், கொள்கை, திட்டம். **உள்ளே ஓட்டுப் பொறுக்குவதற்காக காங்கிரசு கையாளும் உத்தி சாதி, மத, இன, மொழி, பிராந்திய ஆதிக்க சக்திகளை வளைத்துப் போட்டு, விலைக்கு வாங்கி ஆட்சியைப் பிடிக்கும் புறக்கடை வழிதான்!**


பெண்ணாடம் துப்பாக்கிச் சூட்டில் காயம் பட்ட செல்வராசு.

**இதுதான் ஆங்கிலேய காலனிய காலத் தேர்தல்கள்** முதற்கொண்டு சமீபத்திய இடைத் தேர்தல்கள் வரையிலான காங்கிரசின் நடைமுறை. பொறுக்கி அரசியலில் கருணாநிதியும்—எம்ஜிஆரும் முன்னோடிகளாக விளங்கி தமிழ்நாட்டுக்குப் 'பெருமை' செய்ததைப் போல ராஜாஜியும் காமராஜரும் சாதி அரசியலில் முன்னோடிகளாக விளங்கினார்கள். ஓட்டுப் பொறுக்குவதில் காங்கிரசுக்கு என்று ஒரு தனி வழி வகுத்தார்கள். இந்த வகையில் காங்கிரசு, பாரம்பரிய உரிமை கொண்டாடுவது நியாயந்தான்!

ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்தின் கீழ் நடந்த முதல் மூன்று தேர்தல்களில், பார்ப்பனரல்லாதார் என்கிற பெயரில் முழுக்க முழுக்க மிட்டா மிராசுதார்கள், சமஸ்தான அரசர்களின் நீதிக் கட்சி சாதி அரசியல் நடத்தியே ஆட்சியைப் பிடித்தது. சிறுபான்மையினரான பார்ப்பனத் தலைமையின் கீழ் காங்கிரசு இருந்தது. நீதிக் கட்சியிடமிருந்து ஆட்சியைப் பிடிப்பதற்கு சாதித் தலைவர்களை வளைத்துப் போட்டு, பதவி—எச்சில்களை வீசியது. அதற்கான சாதி அரசியல் உத்திகளை வகுத்தவர்கள் காமராஜரின் அரசியல் குருவான சத்தியமூர்த்தியும் ராஜாஜியும் ஆவர். 1952 தேர்தலின் போதும், அதன் பின்னரும் மாணிக்கவேலு நாயக்கர், ராமசாமி படையாச்சி போன்ற சாதித் தலைவர்கள் தனித் தனி கட்சிவைத்து சட்டமன்றத்தில் சில இடங்களைப் பிடித்தனர். சிறுபான்மையாக இருந்த காங்கிரசுக்குத் தலைமையேற்க மேற்கு வங்க கவர்னராக இருந்த ராஜாஜி அழைக்கப்பட்டார். அவர் மாணிக்கவேலருக்கும், ராமசாமிப் படையாச்சிக்கும் மந்திரி பதவிகள் கொடுத்து வளைத்துப் போட்டு ஆட்சி நடத்தினார்.

ராஜாஜிக்கும், காமராஜருக்கும் பதவிப்போட்டி வந்த போது சாதி அடிப்படையிலே பலத்தைத் திரட்டி முதலமைச்சர் பதவியை காமராஜர் கைப்பற்றினார். காமராஜர் கடைசியாகப் போட்டியிட்ட நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதியில் 1971 தேர்தல் முடிய ஓட்டுப் பொறுக்குவதற்காக தனது பெயரை காமராஜ நாடார் என்றே போட்டுக் கொண்டவர். முழுக்க முழுக்க சாதி அடிப்படையிலேயே காங்கிரசு நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள், எம்எல்ஏ, எம்பிக்கள். முதல் மந்திரிகள்வரை தெரிவு செய்தவர். தெற்கே செல்லப் பாண்டியன், விருதுநகர் ராமசாமி நாடார், ஏ.ஏ. சுப்ப ராஜா, ராமகிருஷ்ணத்தேவர், கரிய மாணிக்க அம்பலம். மேற்கே, நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார், திப்பையா, ராமகிருஷ்ண நாயுடு, தீர்த்தகிரி கவுண்டர், வடக்கே மணலி ராமகிருஷ்ண முதலியார், தட்சிணாமூர்த்தி முதலியார், ராமசாமி படையாச்சி, கிழக்கே துளசி வாண்டையார், மூப்பனார், தென் கொண்டார், பரிசுத்த நாடார் போன்றவர்கள்தான் காமராஜரின் சாதி அரசியல் தூண்களாக இருந்தனர்.

ராஜாஜி, காமராஜரைப் போலவே சாதியத் தலைவர்களை வைத்தே ஓட்டுப் பொறுக்குவதை வழக்கமாகக் கொண்டு பிற மாநிலத் தேர்தல் வெற்றிகளை அடைந்த காங்கிரசு, மேலும் ஒரு கட்டம் முன்னேறியது. பலம் வாய்ந்த உள்ளூர்—மாநிலத் தலைமை எதுவும் உருவாகிவிடக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் சாதி, மத, இன, மொழி, பிராந்திய வெறி சக்திகளைத் தூண்டி மோதவிட்டு ஆதாயம் தேடும் அபாயமான அரசியல் சூதாட்டத்தில் இறங்கியது. 1957ல் கேரளபோலிக்கம்யூனிஸ்டு


பெண்ணாடத்தில் நடந்த தாக்குதலில் காயம்பட்ட வன்னியர் சங்க அமைப்பாளர் மணிவேல்.



படிப்பகம்



நடிப்பையே அரசியலாக்குகிறார் பாசிச ராஜீவ் கோவில்கள்— கல்லறைகளுக்கு தவறாது யாத்திரை.

ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நாயர், கிருஸ்தவர், முஸ்லீம் ஆகிய சாதி வகுப்புவாத சக்திகளைத் திரட்டி மாநிலம் தழுவிய கலவரத்தை அப்போதைய காங்கிரசு தலைவராய் இருந்த இந்திராவே தூண்டினார்.

பெரும்பான்மை சாதி, மத இன, மொழி மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் பாசிச வெறிபிடித்த ஒருகும்பலை உருவாக்கி சிறுபான்மையினருக்கு எதிராகக் கலவரத்தைத் தூண்டிவிட்டு, சிறுபான்மையினருக்குகாங்கிரசுதான் பாதுகாவலனாகஇருக்க முடியும் என்று கருத்தை உருவாக்கி ஓட்டுப்பொறுக்குவது காங்கிரசு கையாளும் முக்கியமான உத்தி. இதன்படிதான் சிவசேனையை இந்திரா வளர்த்து விட்டார். சிவசேனையுடன் இரகசிய கூட்டுச் சேர்ந்து மராத்திய—இந்துமத பெரும்பான்மையின் ஆதரவைப் பெறுகிறதுகாங்கிரசு. அதே சமயம் மராத்தியர் அல்லாத தென்னிந்தியர்கள் மற்றும் மேல் சாதி இந்துக்கள் அல்லாத தாழ்த்தப்பட்டவர்கள்—முஸ்லீம்களின் காவலான நடித்து ஓட்டுப் பொறுக்கியது.

இதேபோலத்தான் ஆந்திராவில் முன்பு தெலுங்கானா, இப்போது ராயலசீமா பிராந்திய மக்களின் ஆதரவைப் பெற்றது; இப்பவும் முஸ்லீம் மஜ்லிஸ் என்ற மத வெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. பஞ்சாபில் பிந்தரன் வாலேயை உருவாக்கி அகாலிதளத்தைப் பிளந்து ஆட்சியைப் பிடித்தது. மதவெறி நெருப்பில் குளிர்காய்ந்தது காங்கிரசு; ஆனால் அதுவே ஆயிரக்கணக்கான மக்களைக் காவுகொண்டது. இப்போது இந்து சிவசேனையை உருவாக்கி இந்துமத மக்களின் காவலனாக நடித்து செல்வாக்குப் பெற முயலுகிறது.

திரிபுராவில் உபஜாதி ஜுப சமதி என்ற மலைசாதிக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, திரிபுரா தேசியத் தொண்டர்படை என்கிற கொலைவெறி கும்பலை வைத்து நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று மாநிலம் முழுவதையும் கலவரப் பகுதியாக அறிவித்து ராணுவத்தை நிறுத்தி, தேர்தல் மோசடிகள் செய்து ஆட்சியைப் பிடித்தது. அசாமில் முஸ்லீம், வங்காளி, மற்றும் மலைவாழ் சிறுபான்மைப் பிரிவு அமைப்புகளை வைத்து அசாம் மக்கள் கட்சிக்கு எதிராக அரசியல் நடத்துகிறது.

வடமாநிலங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக மேல் சாதி வெறியர்களையும், முஸ்லீம்களுக்கு எதிராக இந்துமத வெறியர்களையும் வைத்து கலவரங்களைத் தூண்டி மக்களைப் பலியிட்டு ரத்தம் குடிக்கிறது. பாபர் மசூதி—ராமர் கோவில் விவகாரத்தை இதற்காகவே கிளப்பியது. குஜராத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் இடஒதுக்கீடு பிரச்சினையைத் தூண்டி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான கலவரங்களை மூட்டி தேர்தல் ஆதாயங்களை அடைந்தபிறகு அதையே மதக்கலவரங்களாக மாற்றி திசை திருப்பியது. பீகாரில் மேல்சாதி வெறியர்கள் மற்றும் கிரிமினல் குற்றவாளிகளின் தனி ஆயுதப்படைகளை ஊக்குவித்து தாழ்த்தப்பட்ட மக்களை வேட்டையாடுகிறது.

காமராஜரிடம் சாதி அரசியல் பாடம் கற்ற கருப்பையா மூப்பனார் கட்சி மாறி—இந்திரா—ராஜீவ் கும்பலுடன் சேர்ந்து வடக்கே போய் மதவெறி, பிராந்திய வெறி அரசியல் பாடமும் கற்றுக்கொண்டு திரும்பியுள்ளார். கூடவே பத்திரிக்கையாளர்களை விலைக்கு வாங்குவது, முதலாளி—நிலப்பிரபுக்களுடன் பேரம் நடத்துவது, அரசியல் பிழைப்புவாதிகளை உருவாக்குவது, எதிர்க் கட்சிகளைப் பிளப்பது, கட்சி மாறச் செய்வது, நவீன விளம்பர உத்திகள் போன்ற அனுபவங்களோடு வந்திருக்கிறார். எனவேதான் தமிழ்நாடு வந்து இறங்கியதும் தனது கைவரிசைகளைக் காட்டத் துவங்கிவிட்டார்.

## மூப்பனாரின் கைவரிசகைள் காங்கிரசின் தில்லுமுல்லுகள்

காங்கிர்சுக்கு செல்வாக்கு தேடுவதற்காக தனது நம்பகமான விசுவாசியான அலெக்ஸாண்டரை கவர்னராக நியமித்தது பாசிச ராஜீவ் கும்பல். கவர்னர் ஆட்சி காங்கிரசு ஆட்சிதான் என்று உரிமையோடு சொல்லிக் கொள்கிறது. ‘‘காமராஜரின் ஆட்சி பொற்காலம். கழகங்களின் ஆட்சி இருண்ட காலம். தாழ்ந்த தமிழகம் மீண்டும் முன்னேற காமராஜரின் ஆட்சி அமைப்போம்’’ என்கிற காங்கிரசுப் பிரச்சாரத்தை அரசு எந்திரத்தைக் கொண்டே செய்வதுதான் கவர்னரின் வேலை என்றானது. நிர்வாகத்தைச் சீரமைப்பது, நகரை அழகுபடுத்துவது, தொழில்களுக்குச் சலுகைகள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு–வேலை ஆகியவை முதற்கொண்டு காமராஜர்—பக்தவத்சலத்திற்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புவது வரை எல்லாம் காங்கிரசின் பிரச்சார இயக்கங்களாகவே உள்ளன. சென்னை—மறைமலை நகர் காங்கிரசு மாநாடு, ராஜீவ் பிரச்சாரப் பயணங்கள் முதல் மூப்பனாரின் அன்றாட அசைவுகள் கூட அரசு செலவில்—பிரச்சாரத்தில் நடக்கிறது.

அலெக்ஸாண்டரும் மூப்பனாரும் வந்திறங்கியதும், செய்த முதல் காரியம் பத்திரிக்கைக்காரர்களை வளைத்துப் போட்டதுதான். அலெக்ஸாண்டரின் நிர்வாகத் திறமைகளையும், மூப்பனாரின் சாணக்கியத்தனங்களையும் பத்தி பத்தியாக வரிந்து தள்ளுகிறார்கள். எதிர்க்கட்சிகள் பற்றிய வதந்திகளைப் பரப்புகிறார்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

கள். ராஜீவின் பிரச்சாரப் பயணங்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து அலைகிறார்கள். மத்தியிலே ராஜீவ் அரசை வீழ்த்துவதற்காக வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் இந்தியன் எக்ஸ்பிரஸ்—தினமணி ஏடுகள்கூட ராஜீவுக்கு 'லாலி' பாடி தமிழ்நாட்டில் காங்கிரசு ஆட்சி ஏற்பட வேண்டும் என்று ஒருதலைப்பட்சமாகச் செய்திகளை வெளியிடுகின்றன. காங்கிரசு தனது பிரச்சாரத்துக்காக செய்யும் அதிகார முறைகேடுகளைக் கண்டு கொள்வதில்லை. வானொலியும், வானொளியும் ராஜீவ்—மூப்பனார் புராணம் பாடுவதையே முழு நேரப் பணியாகக் கொண்டுள்ளன. சிறு ஊரில் நடக்கும் மூப்பனாரின் கட்சிக் கூட்டம் கூட வானொளியில் காட்டப்படுகின்றன.

பாசிச ராஜீவ் இன்னொரு எம்ஜிஆராக, கொடை வள்ளலாக கவர்ச்சி நாயகனாக—கருத்தை உருவாக்குவதற்காக மாதா மாதம் திட்டமிட்டு பிரச்சாரப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதையும் அரசு செலவில் செய்துவிடுவதற்காக ஏதாவது ஒரு அரசு விழா ஏற்பாடாகிறது. எம்ஜிஆர் பாணியில் பல இலவசத் திட்டங்களை அறிவிக்கிறார். கிழவிகளைக் கட்டிப் பிடித்து, குழந்தைளுக்குப் பெயர் சூட்டி, சிறுமிக்கு முத்தம் கொடுத்து, ஏழை பெரியவருக்கு காசு பணம் கொடுத்து, பொன்னாடைகளை வீசி, குடிசைகளுக்குப் போய் குடிநீர் குடித்து, தானே காரை ஓட்டிப் போய், கையசைத்து, புன்னகைத்து, மனுக்களை வாங்கி, அதிகாரிகளிடம் கோபித்துக் கொண்டு, மக்களிடம் கருணை பொழிந்து—நடிப்பையே அரசியலாக்குகிறார். மசூதி—தர்காக்களுக்கும், மாதா கோவில்கள்— கல்லறைகளுக்கும், கோயில்கள்—நினைவுச் சிலைகளுக்கும் தவறாது யாத்திரை போகிறார்.

தமிழ்நாட்டில் காங்கிரசின் பலம் கூடிவிட்டதாகக் காட்டுவதற்காக பார்ப்பனப் பிரமுகர்களையும், பத்திரிகைப் பிரபலங்களையும் கட்சியில் சேர்க்கும் இயக்கம் மும்முரமாக நடக்கிறது. ஜெயகாந்தன், சிவசங்கரி, ஜி. வெங்கடேசுவரன் போன்றவர்களை இழுத்துப் போட்டார்கள். காங்கிரசுக்கு மறைமுகப் பிரச்சாரம் செய்வதற்காக உதயமூர்த்தி, சி. சுப்பிரமணியம், துக்ளக் "சோ" போன்றவர்களை வளைத்துப் போட்டார்கள். நேரடிப் பிரச்சாரத்துக்காக சினிமா நடிகர்—நடிகைகள் மாயா, தீபா, சிரிப்பு நடிகர் கிருக்கு மோகன் இன்னும் பல துணை நடிகர்— நடிகைகளுக்கு கதர் கட்டி, காந்தியம் பேசவிட்டார்கள். இப்படிப்பட்ட கழிசடை



பெண்ணாடம் அருகே நந்திமங்கலம் காலனியில் எரிக்கப்பட்ட வீடுகள்.

களைக் காட்டி தமிழ் மக்களை ஏய்க்க முடியும் என்கிற திமிரோடு சுற்றுகிறார் மூப்பனார். அதை நம்பச் சொல்லி பாசிச ராஜீவிடமே மோசடி செய்து கோடி கோடியாகச் சுருட்டிக் கொள்கிறார். எம்ஜிஆரைக் 'காப்பி' அடிப்பதோடு அவரைப் போலவே ஒரு அரசியல் பிழைப்புவாதக் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிவிடும் கற்பனை உலகில் மிதக்கிறார்.

மூப்பனார் தமிழ்நாட்டில் வந்து இறங்கியதும், "காங்கிரசு தனித்துப் போட்டியிடும், மூப்பனார் தலைமையில் மீண்டும் காமராஜர் ஆட்சி அமைக்கும்" என்கிற கூச்சல் போடத் தொடங்கிவிட்டனர். அதற்காக அவர் வகுத்த உத்திகளில் ஒன்று கட்சிகளைப் பிளவுபடுத்தி, சிதறடிப்பதாகும். முதலில் எம்ஜிஆரின்கட்சியைப் பிளந்து ஆட்சியைக் கவிழ்த்தனர். ஜெயலலிதா கூடுதலான பேரம் பேசவே, அவரதுகட்சியையும் பிளந்தனர். இதற்கெல்லாம் பண்ருட்டி ராமச்சந்திரனை தரகனாகப் பயன்படுத்தினர். கட்சி மாறி நாஞ்சில் மனோகரன் தலைமையில் ஒரு கும்பலை உருவாக்கி கருணாநிதி கட்சியைப் பிளப்பதற்குத் தொடர்ந்து முயலுகின்றனர். விலை போவதற்குக் காத்து கிடந்த அப்துல் சமதை வைத்து முஸ்லீம் லீகைப் பிளந்தனர்; போலிக் கம்யூனிஸ்டு தலைவர்களை விலைக்கு வாங்கி கருணாநிதியின் கூட்டணியைச்சிதறடிப்பதற்கான பேரம் நடத்துகின்றனர். "சோ"வையும்—செழியனையும் வைத்து ஜனதாவைப் பிளந்தனர். இதனால் எல்லாம் கருணாநிதி கட்சிக்கு காங்கிரசுதான் மாற்று என்கிற கருத்தை—நிலைமையை உருவாக்கத் தொடர்ந்து முயலுகின்றனர்.

## சாதி—மத வெறியர்களுடன் பேரங்கள் கலவரங்களைத் தூண்ட சதிகள்

இவையெல்லாம்கூட ஓட்டுப் பொறுக்கிகளின் தந்திரங்கள்தாம். ஆனால் சாதி மத வெறியர்களுடன் சந்தர்ப்பவாத பேரங்கள் நடத்தி, சாதி—மதக் கலவரங்களைத் தூண்டி ஆட்சியைப் பிடிப்பதற்கு மூப்பனார் கையாளும் சாணக்கியத் தனங்கள்தாம் மிகவும் அபாயகரமானவை. ஏற்கனவே இடஒதுக்கீடு கோரித் தீவிரமாகப் போராடி வரும் வன்னியர் சங்கத் தலைமையுடன் பேரங்கள் நடத்தத் துவங்கினார். காங்கிரசுக் கட்சியிலேயே உள்ள மணிவர்மா, திண்டிவனம் ராமமூர்த்தி, ராமசாமிபடையாச்சி, திருக்குறள் முனுசாமி போன்றவர்கள் ராமதாசுடனான பேரத்தில் கூடுதலான ஆதாயம் பெறுவதற்கான சதுரங்கக் காய்களாகநகர்த்தப்பட்டனர். பங்காரு அடிகளார், பண்ருட்டி ராமச்சந்திரன்போன்றவர்கள் ராமதாசுக்கும்மூப்பனாருக்கும் இடைத்தரகர்களாக செயல்பட்டனர்.

தேர்தலைத்தொடர்ந்துதள்ளிவைப்பதற்கான முகாந்திரமாக வன்னியர்—"அரிசன" கலவரங்களைத் தூண்டுவது; அதற்கு ராமதாசு தலைமை வன்னியர் தரப்பிலிருந்தும், இளையபெருமாள் தலைமையினர் "அரிசன"த் தரப்பிலி



படிப்பகம்

www.padippakam.com



உயிருக்குப பயந்து வடகரைக காலனியை காலி செய்த கடைசி பத்து பேர்;

ருந்தும் வேலை செய்வது—தேர்தல் வரும்போது காங்கிரசுக்கு ஓட்டு மொத்தமாகவன்னியர்களை வாக்களிக்கச் செய்வது அல்லது குறைந்தபட்சம் வன்னியர் பெரும்பான்மையாக உள்ள தொகுதிகளில் கருணாநிதி கட்சி உட்பட எதிரணியினர் எவரும் பிரச்சாரமோ, வாக்களிக்கவோ இயலாதவாறு வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது உட்பட தேர்தல் அராஜகங்களைத் தூண்டுவது. ''வனனியர்''—''அரிசன''க் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு—நிதி உதவி, நிவாரணங்கள் அளிப்பதன் மூலம் காங்கிரசுக்கு ஆதரவு தேடிக் கொள்வது.

காங்கிரசுக்காக இப்படிப்பட்ட சதிகளைச் செய்வதற்கு ஈடாக வன்னியர்—அரிசன சாதித் தலைவர்களுக்கு எம்எல்ஏ, மந்திரி பதவிகள் அளிக்கப்படும். வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு பற்றிப் பரிசீலித்து ஓரளவு ஏற்றுக் கொள்ளப்படும். இந்த இரகசிய பேரத்தின் அடிப்படையிலேயே ஆங்காங்கே வன்னியர்—''அரிசன'' மோதல்கள் நடக்கின்றன. இதற்கான ஆதாரத்தை வேறு எங்கும் தேட வேண்டியதில்லை.

● வன்னியர் பெரும்பான்மையாக உள்ள தொகுதிகளில் வேறு எல்லாக் கட்சிப் பிரச்சாரமும் தடுத்து விரட்டப்படுகிறது; கொடிக் கம்பங்கள் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன. ஆனால் ராஜீவ்—மூப்பனார் பரிவாரங்கள் எவ்விதத் தடையுமின்றி சுதந்திரமாகப் போய் பிரச்சாரம் செய்கின்றன.

● சென்ற ஆண்டுவன்னியர் சங்கம் நடத்திய தொடர்சாலை மறியல் போராட்டத்தின்மீது நடந்த துப்பாக்கி சூட்டில் இறந்தவருக்கு எம்ஜிஆர் நிவாரணத் தொகை அளித்தார். வன்னியர் சங்கம் அதை நிராகரித்துவிட்டது. ஆனால் ஓராண்டுக்குப் பிறகு அதற்காக ராஜீவ் அளித்த நிவாரணத் தொகையை நிராகரிக்கவில்லை.

● புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்யும் வன்னியர் சங்கம் பிரதரிடம் இருந்து சலுகைக்கான அறிவிப்பு வந்தால் தேர்தலில் பங்கேற்கும் என்கிறது. தேர்தல்சமயத்தில் ராஜீவ்—மூப்பனார் வாக்குறுதி அளித்தாலே பங்கேற்கலாம் என்பதற்கு இது இடமளிக்கிறது.

● கருணாநிதியைத் தமது முதல் எதிரியாகவும், காங்கிரசு கைக்கூலி யண்ருட்டி ராமச்சந்திரன் தமது சாதிக்காகப் பாடுபடுபராகவும் தொடர்ந்து வன்னியர் சங்கம் பிரச்சாரம் செய்கிறது.

ஆட்சியைப் பிடிப்பதற்காக மூப்பனார் தூண்டிவிடும் இந்த சாதி வெறி கலவரங்களால் கூலி ஏழை விவசாயிகளான வன்னியர்களும், தாழ்த்தப்பட்ட மக்களுமே ஏராளமாகப் பலியாவர். குறிப்பாக வன்னியர் சங்கமளவுக்கு ஒன்றுபட்ட தலைமையோ, அமைப்பு பலமோ இல்லாத தாழ்த்தப்பட்ட மக்கள் பிழைப்புவாதத் தலைவர்களின் தூண்டுதலுக்கு இரையாவர். அதே சமயம் மிக அதிக அளவில் பலியாவார்கள்; அவர்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளக்கூட இயலாது. வன்னிய 'அரிசன' உழைக்கும் மக்களிடையே தலைமுறை தலைமுறைக்கும் தீராத பகை ஏற்படும்.

நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, செஞ்சி ராமச்சந்திரன், வீரபாண்டி ஆறுமுகம், மதுராந்தகம் ஆறுமுகம் ஆகிய வன்னிய சாதியைச் சேர்ந்த திமுக தலைவர்களை விட்டு ராமதாசுக்கு சவால் விடுவது, அதே சமயம் வன்னியருக்கு இட ஒதுக்கீடு பற்றி வாக்குறுதி அளிப்பது தவிர இந்தப் பிரச்சினையை சமாளிக்க கருணாநிதிக்கும் வேறு வழி தெரியவில்லை. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிச் சங்கங்கள் எல்லாம் தி.கவின் கிளைகளைப் போன்றவை என்று கூறும் வீரமணி வாயை இறுகக் கட்டிக் கொண்டுள்ளார். நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கு, பிள்ளைமாருக்கு, கிறிஸ்தவப் பின்தங்கியவருக்கு என்று, ஆக 90 சதவிகிதத்தினருக்கு இட ஒதுக்கீடு என்பதாக இவர்கள்வாக்குதிறுகொடுத்து அவ்வப்போது ஆதாயம் அடைகின்றனர். இட ஒதுக்கீடு, இந்தப் பிரிவு மக்களின் வாழ்வை முன்னேற்றிவிடுவதற்கான ஒரே வழி என்று பிரமையூட்டி வரும் இந்தக் கட்சிகள் அந்த வழியிலே போய் முட்டி மோதிக் கொள்ளும்போது நழுவி விடுகிறார்கள்.

முஸ்லீம் லீகைப் பிளந்து முஸ்லீம் மக்களிடம் ஓட்டுப் பொறுக்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்ட மூப்பனார், கிறுஸ்தவர் பக்கம் திரும்பியுள்ளார். மதம் மாறிக் கிறிஸ்தவர்களான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடையாது என்று 1950ல் உத்தரவு போட்டது ராஜீவின் மூதாதை நேருதான். 'தலித்' கிறிஸ்தவருக்கு இட ஒதுக்கீடு வேண்டும், 1950 உத்திரவை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில ஆண்டுகளாக அவர்களால் எழுப்பப்படுகிறது. அப்போது உத்திரவு போட்டு சலுகையைப் பறித்த காங்கிரசு இன்று ஆதரிப்பதாக முன்வருகிறது. இதற்காக காங்கிரசு எம்பியும், திருச்சி மொத்த சாராய வியாபாரியுமான அடைக்கலராஜ் தலைமையில், மேகாலய முதல்வர், மத்திய மந்திரி, பாண்டிச்சேரி மந்திரி கலந்து கொள்ள தமிழ்நாடு முழுவதுமுள்ள பாதிரிகளைக் கூட்டி மாநாடு நடத்தியுள்ளது.

கேரளத்தில் கிறிஸ்தவர்களின் கேரள காங்கிரசு, முஸ்லீம் லீக், நாயர்களின் ஜனநாயகக கட்சி போன்ற சாதிமத கட்சிகளை வைத்து ஓட்டுப் பொறுக்குவது போல தமிழ்நாட்டிலும் முயலுகிறது மூப்பனார் கும்பல். காங்கிரசு ஆளும் பெரும்பாலான மாநிலங்களில் மூப்பனார், பார்ப்பனர் போன்ற சிறுபான்மை சாதியினரே முதல்வர்களாகவும், மந்திரிகளாகவும் உள்ளனர். பெரிய சாதிகளை மோதவிட்டு, அவற்றுக்கிடையே சரிக்கட்டிக் கொள்ளும் வகையில் இவர்களை நியமித்து மத்திய அரசிலிருந்து ஆட்டிவைக்கும் நேரு, இந்திரா, ராஜீவின் உத்திதான் இது!

தொடரும் பாசிச ராஜீவ் கும்பலின் இந்த சாணக்கியத் தந்திரங்களை அம்பலப்படுத்தி முறியடிப்பது, புரட்சிகர அரசியலை முன்னெடுத்துச் செல்ல அவசியமானது.

ஆர். கே.



படிப்பகம்

www.padippakam.com

# திவால் நிலையை நோக்கி...

சேற்றுக்குள் விழுந்தவன் அதிலிருந்து தப்புவதற்கு அழுத்தமாக காலை மேலும் மேலும் உதைத்து புதைகுழியில் போய் சிக்கியதைப் போல இந்திய அரசு கடன் புதைசேற்றில் சிக்கி மீளவழி தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. கணக்கு வழக்கின்றி கடன் வாங்கி திவாலாகும் நிலையிலுள்ள நாடுகளின் வரிசையில் இந்தியாவும் அணிவகுத்து நிற்கத் தொடங்கிவிட்டது.

1984ல் ரூ32.000கோடியாக இருந்த அன்னியக் கடன் இன்று 49,000 கோடியாகி விட்டது. 1995ல்— அதாவது 8வது ஐந்தாண்டு திட்ட முடிவில் இது 68,000 கோடியாக உயரும். இதோடு ஆண்டுதோறும் ரூபாயின் மதிப்பு மேலும் மேலும் வீழ்ச்சியடைவதையும் சேர்த்து கணக்கிட்டால் இந்தத் தொகை மேலும் அதிகமாகும்.

1980ல்ரூ11,294 கோடியாக இருந்த உள்நாட்டுக் கடன் 1988ல் ரூ 82,267 கோடியாக உயர்ந்துள்ளது. வருமாண்டில் இது ரூ 96,706 கோடியாக உயரும.

இது தவிர பிராவிடண்ட் நிதி, சிறுசேமிப்பு முதலான அரசு கடன்களையும் சேர்த்தால் மொத்தக் கடன் ரூ 2,25,000 கோடியாகும் என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே அறுதியிடுகின்றனர். இது இந்திய அரசின் மொத்த வருவாயைவிட 4 மடங்குக்கும் மேலாகும்.

இப்படி மலைமலையாக வாங்கப்படும் கடன்கள் அனைத்தும் ஏற்கனவே வாங்கிய பழைய கடனுக்கான வட்டி கட்டுவதற்கே போதுமானதாக இல்லை. எனவே மேலும் கூடுதல் வட்டி தருகிறேன். என்று கவர்ச்சி காட்டி உள்நாட்டுக் கடனை மேலும் மேலும் வாங்கிக் குவிக்கிறது. இப்போது 14.8 % தவீத வட்டி தருகிறேன் என்று இந்திர விகாஸ் பத்திரங்களை அரசு வெளியிட்டுள்ளது. உள்நாட்டில் கடன்களை வாங்கிக் குவிப்பதில் தான் மட்டுமே ஏகபோகமாக இருக்க வேண்டுமென்று, வேறெந்த தனியார் நிறுவனமும், இந்த அளவுக்கு வட்டி கொடுத்து கடன் பெறக்கூடாது என்றுகட்டுப்பாடும் விதித்துள்ளது.

அது சரி! அரசாங்கம்தானே கடன் வாங்குகிறது! அதனால் நமக்கென்ன வந்தது? என்று இந்நாட்டு மக்கள் ஒதுங்கியிருந்து விட முடியாது. இந்த கடன் சுமை முழுவதும் நமது முதுகில் தான்சுமத்தப்படுகிறது. அதாவது



இந்நாட்டு குழந்தைகளையும் சேர்த்துக் கணக்கிட்டால் நம் ஒவ்வொருவர் மீதும் ஏறத்தாழ 3000 ரூபாய் கடன் சுமத்தப்பட்டுள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் கோடிக்கணக்கான இந்திய கூலி—ஏழை, விவசாயிகளின் ஆண்டு வருமானம்கூட இந்த அளவு கிடையாது. நிலைமை இப்படியிருக்க மேலும் மேலும் கடன் வாங்குவதால் அசலையோ வட்டியையோ திருப்பி தர முடியாமல் திவாலாகும் நிலைமை ஏற்படும். இப்படி எச்சரிப்பது நாமல்ல; இந்திய அரசின் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி.

இதில் வேடிக்கை என்னவென்றால், வாங்கிய அந்நியக் கடன்கள் பலவற்றை இந்தியா பயன்படுத்தவே இல்லை. ஆனால் பயன்படுத்தா விட்டாலும் ஒப்பந்தப்படி 'சர்வீஸ் சார்ஜ்' என்ற பெயரில் கோடிக் கணக்கில் இந்தியா கொடுத்து வருகிறது.

''கடன் வாங்குவது சகஜமானது. அதில் தவறொன்றுமில்லை'' என்று அரசு நியாயப்படுத்தினாலும் வாங்கிய கடன்களை வளர்ச்சிக்கான தொழில்களில் அரசு முதலீடு செய்வதேயில்லை. உற்பத்திக்கு உதவாத செலவினங்களில் கொண்டு போய் கொட்டுவதே அரசின் நடைமுறையாக உள்ளது. அதாவது வாங்கிய கடன்களுக்கு வட்டி கட்டுவது, மானியங்கள் வழங்குவது; இவை தவிர பெரும்பகுதி ராணுவத்துக்காகவும், அந்நிய நாடுகளிடமிருந்து நவீன எந்திரங்களை இறக்குமதி செய்யவும் செலவிடப்படுகிறது. அப்படிச் செய்தால்தானே பாசிச ராஜீவ் கும்பல் கமிஷன் அடிக்க முடியும்!

இப்படி நாட்டை எதிர் திசையில் வழிநடத்திச்சென்றதன் விளைவாக மேலும் பொருளாதார நெருக்கடிமுற்றி மீண்டும் கடனுக்கான இந்திய அரசு அலைகிறது. இதன்படி 88—89ல்இந்திய அரசு உள்நாட்டு மக்களிடம் மட்டும் ஏழாயிரம் கோடி ரூபாய் கடன் வாங்க முடிவு செய்துள்ளது. ஆனால் உள்நாட்டில் ஏற்கனவே வாங்கிய கடன்களுக்கு இந்த ஆண்டு செலுத்த வேண்டிய வட்டி மட்டும் 7027 கோடி ரூபாய். கடன் வாங்குவது இதே விகிதத்தில் போனால் இந்திய அரசு மஞ்சள் கடுதாசி கொடுக்க வேண்டியதுதான் என்று எச்சரிக்கிறது தணிக்கை கட்டுப்பாட்டு துறையின் அறிக்கை.

இனி, இக்கடன் புதை சேற்றிலுருந்து மீளமுடியுமா என்பது கேள்விக் குறிதான். கோடிக் கணக்கான ந்டுத்தர மக்களிடமிருந்து சிறுசேமிப்பு, கடன் பத்திரங்கள் மூலம் அரசு வாங்கிய கடன்களைத் திருப்பித்தர முடியாது என்று பட்டை நாமத்தைக் குழைத்து போடும். அல்லது மீண்டும் உலக வங்கி—சர்வதேச நிதி நிறுவனத்திடம் (IMF) தேசத்தை முற்றாக அடகு வைத்து இந்திய அரசு மீண்டும் கடன் வாங்கும். அதன் சுமை முழுவதும் மீண்டும் நம் முதுகில் சுமத்தப்படும். விலைவாசி உயர்வும், கட்டண உயர்வும், வேலைப் பளுவும் திணிக்கப்படும். வறுமையும் வேலையின்மையும் பட்டினிச் சாவுகளும் தொடர்கதையாகும். இதை எதிர்த்துப் போராடக்கூடாது என்று பாசிச கருப்புச் சட்டங்கள் பாயும்!

இத்தனையும் சகித்துக் கொள்ளப் போகிறோமா? அல்லது தேசத்தையும் மக்களையும் பேரழிவுக்குள் தள்ளிவிட்ட பாசிச ராஜீவ் கும்பலை எதிர்த்துப் போராடப் போகிறோமா?

●



படிப்பகம்

www.padippakam.com

# விமர்சனமும் விளக்கமும்

நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு நடக்கும் தேர்தல்களை புறக்கணிக்கும்படி புதிய ஜனநாயகமும் பிற கம்யூனிசப் புரட்சி அமைப்புகளும் பிரச்சாரம் செய்து வருகின்றன. அதே சமயம் தொழிற்சங்கம், தொழிற்சாலை மற்றும் அலுவலகக் கமிட்டித் தேர்தல்களில் பங்கேற்கின்றன; போட்டியிடுகின்றன. குறிப்பாக நமது தோழமை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே ஓரிரு தொழிற்சங்கங்களில்போட்டியிட்டு தலைமையைக் கைப்பற்றியுள்ளார்கள். இப்படி வெளியே தேர்தல்களைப் புறக்கணிப்பதும் தொழிலாளர் அமைப்புகளில் பங்கேற்று போட்டியிடுவதும் முரணானது, சந்தர்ப்பவாதமானது என்று நமக்கு எதிரான சிலர் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அது குறித்து ஒரு புதிய ஜனநாயகம் வாசகர் தனது சந்தேகத்தைப் பின்வருமாறு எழுதி விளக்கம் கோருகிறார்.

“புதிய ஜனநாயகம் வாசகர்கள் போலித் தேர்தல்களைப் புறக்கணிப்போம் என்று முழக்கம் வைத்து பிரச்சாரம் செய்து வந்தார்கள். தற்போது தொழிற்சங்கங்களில் சேர்ந்து கொண்டுதொழிலாளர் கமிட்டி (பிஎஃப் கமிட்டி, காண்டீன் கமிட்டி) போன்ற தேர்தல்களில் நின்று மற்ற சங்கங்களோடு சங்கமாக தொழிலாளர்களிடம் ஓட்டுக் கேட்டுக் கொண்டு அலைகிறார்களே. இதைப் போலி கம்யூனிஸ்டுகளும் இந்திய மக்கள் முன்னணிக்காரர்களும், ‘இவர்களும் ஓட்டுப்பொறுக்க வந்துவிட்டார்கள் பார்த்தீர்களா? வெளியில் எல்லாம் புறக்கணிப்பு வேஷம். உள்ளே வந்தால் பதவிக்காக ஓட்டுப் பொறுக்குகிறார்கள். நாளை வெளியில் செல்வாக்கு வந்தால் அங்கும் இதுவே நிலைமை!’ என்பதாகப் பிரச்சாரம் செய்து அம்பலப்படுத்துகிறார்கள் என் போன்ற சில தொழிலாளர்களுக்கும் சரிதான் என்று தோன்றினாலும் அதன் முழு விளக்கம் தெரியவில்லை. ஆகவே அதற்கு தங்களின் வரும் இதழில் விளக்கமளிக்கக் கோருகிறேன். —இராஜேஸ்வரன், திருச்சி.”

“வெளியே” தேர்தல்களைப் புறக்கணிப்பதும் “உள்ளே”—தொழிலாளர் அமைப்புகளில் பங்கேற்பதும் போட்டியிடுவதும் என்கிற கம்யூனிசப் புரட்சியாளர்களின் நிலைப்பாட்டில் முரணானதோ, சந்தர்ப்பவாதமானதோ எதுவும் இல்லை. புதியஜனநாயகபுரட்சியின் மூலம் உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துக்காக இருவேறு அரங்கங்களில் பின்பற்றப்படும் வேறு வேறான அணுகுமுறைகள்—உத்திகள்தாம் இவை.

நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் மூலம் வெற்றி பெறும் பெரும்பான்மையை அரசாங்கமாக அல்லது நிர்வாகத் தலைமையாகக் கொண்டு ஆட்சி நடத்தப்படுகிறது. இதனால் மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களே ஆளும் ஜனநாயக ஆட்சி நடப்பதாக ஒரு பிரமை உருவாக்கப்படுகிறது. உண்மையில் நடப்பதோ வேறு. அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதிமன்றம், சிறைத்

> ஏகாதிபத்திய உளவாளிகளின் தன்னார்வக் குழுக்களின் பிடியிலுள்ள இந்திய மக்கள் முன்னணி மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்கள் மற்றும் பிற தொழிலாளர் அமைப்புகளில் பங்கேற்பது – அணிதிரட்டுவதும், கம்யூனிஸ்டுப் புரட்சியாளர்கள் அவற்றில்பங்கேற்பது – அணிதிரட்டுவதும் அடிப்படையிலேயே வேறு வேறான நோக்கமும், நடைமுறையும் கொண்டவையாகும்.

துறை, போன்ற பலாத்காரமான, நிரந்தரமான, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத தனி ஒரு ஜாதியான அரசு எந்திரம் நிர்வாக அதிகாரமுடையதாக இருந்து நாட்டை ஆளுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஆளும் வர்க்கக் கட்சிகளின் ஒரு சிறு கும்பலை மட்டுமே அரசாங்கமாக அல்லது நிர்வாகத் தலைமையாக ஏற்றுக் கொள்ளுகிறது.

பாட்டாளிவர்க்கக் கட்சி, தேர்தல்கள் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவோ, ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை பயன்படுத்திக் கொள்ளவோ முடியாது. இதைப் பலமுறை மார்க்சிய—லெனினிய ஆசான்கள் வலியுறுத்தியுள்ளார்கள். சிலி, பொலிவியா போன்ற நாடுகளின் அனுபவங்கள் இதையே நிரூபித்தன.

எனவேதான் ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கித் தூக்கி எறிந்துவிட்டு தனக்கென மக்கள் இராணுவம், மக்கள் நீதிமன்றம், நிர்வாக அதிகாரமுடையதாக தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் கமிட்டிகள் போன்ற முற்றிலும் புதிய அரசு அமைப்புகளை புரட்சியின் மூலம் நிறுவுவதன் மூலமே அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். இதையும் பலமுறை மார்க்சிய—லெனினிய ஆசான்கள் வலியுறுத்தியுள்ளார்கள். ருஷ்யா, சீனா போன்ற நாடுகளின் புரட்சிகர அனுபவங்களும் இதையே நிரூபித்தன.

கிராமப்புறங்களையும் விவசாயிகளையும் பெரும்பான்மையாகக் கொண்ட, ஏற்ற தாழ்வான சமூகப் பொருளாதார, அரசியல், கலாச்சார வளர்ச்சியுடைய அரைக் காலனிய—அரை நிலப்பிரபுத்துவ நாடான நமது நாட்டில் நீண்ட கால மக்கள் யுத்தப் பாதையின் மூலமே அரசு எந்திரத்தைத் தகர்த்து உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவ முடியும். அதாவது எதிரி பலவீனமாக உள்ள கிராமப்புறங்களில் மக்கள் படையைக் கட்டி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி தளப் பிரதேசங்களை நிறுவி விரிவடையச் செய்து அலைஅலையாக முன்னேறி, நகர்ப்புறங்களைச் சுற்றி வளைத்து, இறுதியாகக் கைப்பற்றுவது என்பதுதான் யுத்த தந்திரப் பாதையாகும்.

இந்தப் புரட்சிப் பாதைக்குப் பொருத்தமற்றது என்பதால் நாடாளுமன்ற, சட்டமன்ற, மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களை கம்யூனிசப் புரட்சியாளர்கள் புறக்கணிக்கிறார்கள். எனவே புரட்சி நிறைவேறும் வரை தேர்தல் புறக்கணிப்புத்தான், செல்வாக்குப் பெற்ற பிறகு பதவிக்காக பங்கேற்பு என்கிற பேச்சுக்கே இடமில்லை.

குறிப்பிட்ட சில பகுதிகளில் தளப் பிரதேசங்களை நிறுவும் அதே சமயம் நகர்ப்புறங்களிலும் பரந்து விரிந்த பிற தேசங்களிலும் ஆயுதந் தாங்கிய எழுச்சி உட்பட பல போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. தொழிலாளர்கள் உட்பட பல்வேறு பிரிவு மக்களையும் மக்கள் திரள் அமைப்புகளில் திரட்ட வேண்டியுள்ளது. தொழிற்சாலைகளில் கூட்டு உற்பத்தியில் குவிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களைத் திரட்டுவதற்கான சரியான அணுகுமுறை தொழிற்சங்கங்கள் மற்றும் பிற தொழிலாளர் அமைப்புகளில் பங்கேற்பதும், அரசியல் ரீதியில் அணி திரட்டுவதுமாகும்.

ஏகாதிபத்திய உளவாளிகளின் தன்னார்வக் குழுக்களின் பிடியி



படிப்பகம்

www.padippakam.com

லுள்ள இந்திய மக்கள் முன்னணி மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்கள் மற்றும் பிற தொழிலாளர் அமைப்புகளில் பங்கேற்பது—அணிதிரட்டுவதும், கம்யூனிஸ்டுப் புரட்சியாளர்கள்அவற்றில் பங்கேற்பது—அணி திரட்டுவதும் அடிப்படையிலேயே வேறுவேறானநோக்கமும், நடைமுறையும் கொண்டவையாகும். அவர்கள்தாம் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளூராட்சிதேர்தல்களில் பங்கேற்கவும் போட்டியிடவும் பதவிகளைப் பிடிக்கவும் தொழிற்சங்கங்களையும் பிற தொழிலாளர் அமைப்புகளையும் பயன்படுத்துகிறார்கள்.

தொழிலாளர் இயக்கத்தை தொழிற்சங்க பொருளாதார வாதத்துக்குள் முடக்குகிறார்கள். அதாவது அரசுக்கும் ஆலை நிர்வாகத்துக்கும் எதிரான தொழிலாளர்களின் போராட்டங்களைக் கூட தொழில் ரீதியிலான அவர்களுடைய கோரிக்கைகளுக்குள்ளும் சட்டவாதத்துக்குள்ளும் முடக்குகிறார்கள்.

ஆனால் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையிலான தொழிலாளர் இயக்கம் அடிப்படையிலேயே மாறானது. தொழிலாளர்களின் தொழில் ரீதியிலான கோரிக்கைகள் மட்டும் அல்லாது பிற சமூக, பொருளாதார, அரசியல் கலாச்சாரப் பிரச்சினைகளுக்காகவும், சமுதாயத்தின் முன்னணி—தலைமை வர்க்கம் என்கிற முறையில் விவசாயிகள், மாணவர்—இளைஞர், மகளிர் போன்ற பிற பிரிவு மக்களின் பிரச்சினைகளுக்காகவும் போராடுவதன் மூலம் தொழிலாளர்களுக்கு சமூக—அரசியல் போதமளிக்க வேண்டும். இதற்கான பயிற்சிப் பள்ளியாகப் பயன்படுத்திக் கொள்ளவும், தொழிலாளர்களை ஆளும் வர்க்கமாக வளர்த்தெடுக்கவும், நிர்வாகஅனுபவம் பெறவும் தொழிற்சங்கங்களையும், மற்றும் பிற தொழிலாளர் அமைப்புகளையும் கம்யூனிசப் புரட்சியாளர்கள் கட்டி அமைக்கிறார்கள்.

போலியான நாடாளுமன்ற ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்துப் புரட்சிப் பாதையைக் கம்யூனிசப் புரட்சியாளர்கள் தெரிவு செய்துகொண்டுள்ளனர். ஆனால் நாம் ஏதோ எல்லா ஜனநாயக வழிகளுக்கும், ஓட்டுமுறை—தேர்தல் முறைக்கும் எதிரானவர்கள் என்பதாக ஆளும் வர்க்கங்கள் சித்தரிக்கின்றன. ''அராஜகவாதிகள்'', ''தீவிரவாதிகள்'', ''பயங்கரவாதிகள்''—என்று அவதூறு செய்கிறார்கள். இதே அவதூறு வேறுவார்த்தைகளில் அதாவது நாம் ''இடது குறுங்குழுவாதிகள்'' ''வறட்டுவாதிகள்'' ''புறக்கணிப்பு வாதிகள்'' என்று எல்லா வண்ண போலிக்கம்யூனிஸ்டுகளும் செய்கிறார்கள்.

நாம் தற்போதுள்ள கொஞ்ச நஞ்ச ஜனநாயக மற்றும் குடியுரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்ட முயலுகிறோம். அந்த அடிப்படையில்தான் சாத்தியமான, அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத தொழிலாளர் மற்றும் அலுவலக் கமிட்டிகளில் பங்கேற்கிறோம்.

அரசியலற்ற வாதத்தை வைத்து தொழிலாளர்களைத் திரட்டிக் கொள்ள முயலும் இந்திய மக்கள் முன்னணியினர் நமது புரட்சிகர அரசியலைக் கண்டஞ்சுகிறார்கள். தொழிலாளர் இயக்கத்தை ஒரு சிறு கும்பலின் பிழைப்புவாத, தரகு வேலைக்கான அரங்கமாகமாற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் இது வரை, ''இவர்கள் வறட்டு அரசியல்தான் பேசுவார்கள்; நடைமுறைக்கு வர மாட்டார்கள்'' என்று ஏசி வந்தவர்கள்; இப்போது தொழிலாளர் இயக்கத்துக்குள் நாம் நடத்தும் அரசியல் அம்பலப்படுத்துதல்களையும், தொழிலாளர் கமிட்டிகளில் நமது நேர்மையான உறுதியான நடைமுறைகளையும் கண்டஞ்சுகிறார்கள். எனவேதான் நமக்கு எதிரான பலவாறான அவதூறுகளைப் பரப்புகிறார்கள். ஆனால் அவற்றை முறியடித்து புதிய ஜனநாயகப் புரட்சிக்குத் தொழிலாளர்களை அணிதிரட்டும் பணியில் நாம் முன்னேறுவோம்!

—ஆசிரியர் குழு

## நட்புறவா? துரோகமா?

பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் தலைவர் யாசிர் அராபத் இம்மாதத் துவக்கத்தில் இந்தியாவுக்கு வந்திருந்தார். ராஜீவ் காந்தியுடன் அவர் நடத்திய பேச்சு வார்த்தையில், இஸ்ரேலிய ஜியோனிச இனவெறியர்கள் பாலஸ்தீனியர்கள்மீது நடத்திய சமீபத்திய அட்டூழியங்களையும் கொலைவெறியாட்டத்தையும் வேதனையுடன் விவரித்தார். ராஜீவும் தம்மால் இயன்றதனைத்தையும் செய்வதாக வாக்குறுதி அளித்து நட்புணர்வு மேலிட கட்டித் தழுவிக் கொண்டார்.

—இந்தச் செய்தியையும் படத்தையும் பார்ப்பவர்கள் உலகெங்கும் விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு இந்தியா நல்கி வரும் பேராதரவைக் கண்டு மெய்சிலிர்த்துப் போவார்கள். ஆனால்பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவரைக் கட்டித் தழுவும் பாசிச ராஜீவ், அதே சமயம் பாலஸ்தீனியர்களைக் கொன்று குவித்து இனவெறியாட்டம் போடும் இஸ்ரேலிய கொலைகார அரசுடனும் கூடிக் குலாவுகிறது.

இஸ்ரேலுடன் 1982ல்முறிந்து போன உறவு இப்போது மீண்டும்



பூத்துக் குலுங்கத் தொடங்கிவிட்டது. கடந்த ஆண்டிலேயே டேவிஸ் கோப்பை டென்னிஸ் விளையாட்டுக்காக இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் டெல்லி வந்தனர். அதன் பிறகு இவ்வாண்டின் துவக்கத்தில் இந்தியாவில்பம்பாய் நகரில் மீண்டும் இஸ்ரேலிய தூதரகம் அமைக்கப்பட்டு விட்டது.

இதைத் தொடர்ந்து இந்திய வைர வியாபாரிகள் இஸ்ரேலுக்கு பறக்கின்றனர். இஸ்ரேலிலிருந்து செம்மறி ஆடுகளை இறக்குமதி செய்ய இந்தியா முடிவு செய்துள்ளது. இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையேயான வர்த்தம் மட்டும் முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது திடீரென 90 சதவீதம் உயர்ந்துள்ளது என்று பூரித்துப் போகிறார் இஸ்ரேலிய தூதரக அதிகாரி.

ஒருபக்கம், மேற்காசியாவில் அமெரிக்காவின் பேட்டை ரௌடியாக, அரபு நாடுகளையும் பாலஸ்தீனியர்களையும் அடக்கிஒடுக்கும் இனவெறி பிடித்த இஸ்ரேலுடன் கூடிக் குலாவுகிறது ராஜீவ் கும்பல். மறுபுறம் இஸ்ரேலிய இனவெறியர்களுக்கு எதிராக தலைமுறை தலைமுறையாகப் போராடும் பாலஸ்தீனியப் போராளிகளுடன் கைகுலுக்கிறது.

புரிந்து கொள்ளுங்கள், இது தான் போலிக் கம்யூனிஸ்டுகளால் 'முற்போக்கு' என்று சித்தரிக்கப்படும் ராஜீவ் கும்பலின்வெளியுறவு கொள்கை! அரசியல் பித்தலாட்ட மோசடியைதொழிலாகக்கொண்ட பாசிச கும்பலின் 'நடுநிலை' துரோகக் கொள்கை!

படிப்பகம்

www.padippakam.com



# துயரத்தின் பிடியில் வங்கதேசம்!

இந்தியாவின் அண்டை நாடான வங்கதேசம் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கால் நீரில் மூழ்கிய படகுபோல் சின்னா பின்னமாகி தத்தளிக்கிறது. இந்தியாவைப் போன்றே அந்நாட்டு மக்களும் ஆண்டுதோறும் அவதிப்படுவது வழக்கமான ஒன்றுதான் என்றாலும் இவ்வாண்டின் கொடுமைபோல் அந்நாட்டு மக்கள் இதற்கு முன் அனுபவித்ததே இல்லை.

அந்நாட்டின் தலைநகரமான டாக்கா மாநகரம் உட்பட மொத்தம் உள்ள 64 மாவட்டங்களில் 50 மாவட்டங்கள் பல வாரங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அந்நாட்டின் முதுகெலும்பான விவசாயமும் 10 லட்சம் ஹெக்டர் சணல் பயிரும் அறுவடைக்குக் காத்திருந்த சமயத்தில் முற்றிலுமாக நாசமடைந்தது. நாட்டின் மொத்த தரைவழி போக்குவரத்தையும் மறு நிர்மாணம் செய்தால்தான் இனி நாட்டில் சாலை போக்கு வரத்தே நடக்கும் என்கின்ற அளவுக்கு வங்கநாடு சிறு சிறு குட்டைகளாக பிய்த்தெறியப்பட்டு விட்டது.

வெளிவந்த தகவல்கள்படி இதுவரை 3000 மக்கள் இறந்திருப்பார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் சாவு பத்தாயிரக்கணக்கில்இருக்கும்என அஞ்சப்படுகிறது. வெள்ளத்தில் தப்பிப் பிழைத்தவர்களைக்கூட சாவு துரத்துகிறது. இவர்களை மாதிரியே, வெள்ளத்திலிருந்து உயிர் தப்பித்த விஷப் பாம்புகள் நிலப்பரப்பில் குவிந்து, 400க்கும் மேற்பட்டவர்களை கடித்துகொன்றிருக்கிறது. வெள்ளத்திலிருந்து தப்பி பிழைத்தும் தொடர்ந்து பல வாரங்கள் உணவும் குடிநீரும் இல்லாமல் 2000க்கும மேற்பட்டோர் இறந்திருக்கின்றனர். தேங்கியுள்ள வெள்ள நீரையே குடிநீராக குடிக்க வேண்டியிருப்பதால் இதுவரை 15 லட்சம் மக்கள் வயிற்று போக்கு மற்றும் பல கொள்ளை நோய்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். 110 லட்சம் மக்கள் வீடிழந்து அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

மிஞ்சியிருப்பவர்கள் உயிர் பிழைக்க வேண்டும் என்றால் உடனடியாக 3 மில்லியன் டன்உணவு தானியங்கள்வேண்டும்.கொள்ளை நோயை கட்டுப்படுத்தும் மருந்துகள், குடிநீருக்கு, தேங்கியுள்ள நீரை சுத்தப்படுத்த தேவையான ரசாயன கலவைகள் டன் கணக்கில் தேவைப்படுகிறது. தற்காலிக தங்குமிடங்கள், மறு நிர்மாணத்துக்கான ஆரம்ப முதலீடுகள் செய்யவே பல ஆயிரக்கணக்கான கோடிகள் பணம் தேவை. திரும்பவும் விவசாயம் செய்வதற்கான விதைகள்கூட அரசாங்கத்திடம் கைவசம் இல்லை. மொத்த நாட்டையே சூன்யமாக, பொட்டல் காடாக்கிவிட்டது வெள்ளப் பெருக்கு.

வங்கதேசத்தின் சர்வாதிகார எர்ஷாத் அரசோ 2 லட்சம் மக்களுக்கு மட்டுமே இதுவரை தற்காலிக நிவாரண முகாம்களை திறந்துள்ளது. அங்கும் போதிய குடிநீரோ, உணவு, மருத்துவ வசதியோ இல்லை. ‘‘சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் புனரமைப்பு செய்ய முடியாது’’ என நாட்டு மக்களுக்கு கையைவிரித்துவிட்டது ராணுவ சர்வாதிகார எர்ஷாத் அரசு. வெள்ளம் என்றால் வழக்கமாக உதவி செய்யும் அதன் ‘நட்பு’ நாடுகளான அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, அரபு நாடுகள் மட்டுமில்லாமல் உலகத்திலுள்ள பெரும்பாலான நாடுகள் ஓடிச் சென்று உதவி செய்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்நிவாரணங்கள் முழுமையாக சென்றடையவில்லை.

யானைப் பசிக்கு சோளப் பொறி வீசுவது மாதிரி சொற்ப அளவிலான உணவு நிவாரணப் பொருட்களை ஏற்றி வரும் ஹெலிக்காப்டர்களை மக்கள் ஈ போல் மொய்த்து முற்றுகையிடுகிறார்கள். அடுத்தடுத்த முகாம்களுக்கு நிவாரணமளிக்க குறைந்த அளவிலான பொருட்களைஏற்றிச் செல்லும் ஹெலிக்காப்டர்கள் முதல் முகாம்களிலேயே காலியாக்கப்பட்டு திருப்பியனுப்பப்படுகின்றன.

மற்ற முகாம் மக்கள் உணவுப் பொருட்களுக்காக வானத்தையே வெறித்துப் பார்த்து சோர்ந்து போகிறார்கள். இன்னும் சிலவிடங்களில் பொறுமையிழந்த மக்கள், உணவுப் பொருட்களை ஏற்றி வரும் ஹெலிக்காப்டர்கள் தரையிறங்க தாழ்வாக பறக்குமிடங்களிலெல்லாம் அதனடியில் முண்டியடித்து திரள் திரளாக குழுமி விடுகிறார்கள். இதனால் ஹெலிக்காப்டர்கள் தரையிறங்க முடியவில்லை என நிவாரணப் பொருட்களை வழங்காமலேயே திரும்பியிருக்கின்றன.

மொத்த நாட்டையே மயானக் சாடாக்கிய வரலாறு காணாத துயரத்துக்கு கங்கை, பிரமபுத்திரா ஆறுகளில் கரைபுரண்டு ஓடிய பெரும் வெள்ளம்தான் முக்கிய காரணம்.

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தின் வட மேற்கே இமயமலையில் உள்ள மாணசரோவர் ஏரியின் மேற்குக் கரையிலிருந்து கங்கை ஆறும் அதே ஏரியின் கிழக்குக் கரையிலிருந்து பிரமபுத்திரா ஆறும் உற்பத்தியாகின்றன. இதில் கங்கையாறு, அரியானா, உத்திர பிரதேசம் பீகார், மே.வங்க மாநிலங்களின் வழியே ஓடிச் சென்று வங்கதேசத்தைஅடைந்து வங்கக் கடலில் கலக்கிறது. பிரமபுத்திரா ஆறு, திபேத், நேபாளம், அருணாசலப் பிரதேசம் மாநிலங்களின் வழியாக ஓடிச் சென்று வங்கதேசத்தை அடைந்து வங்கக் கடலில் கலக்கிறது. ஆக, இந்த பெருநதிகளின் வடிகால் பிரதேசமாக இருப்பதுதான் வங்கதேசம்.

இந்திய நாட்டில் இந்நதிகள் வெவ்வேறாக பிரிந்து செல்லும் போதே அவற்றினுடையவெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்த முடியவில்லையென கையை கட்டிக் கொண்டு வேடிக்கைப்பார்க்கிறது இந்திய அரசு. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் சாவதும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாவதை நாம்ஆண்டுதோறும் காண்கிறோம். ஏறக்குறைய 50,000 கோடி ரூபாயை ஐந்தாண்டு திட்டத்திற்கு செலவு செய்யும் மாபெரும் இந்திய நாட்டிலேயே இந்த நிலைமை என்றால் 5,000 கோடி ரூபாயை கொண்டு ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

குட்டிநாடான வங்கதேசத்தில் ஆண்டுதோறும் நடக்கும் வெள்ளத் துயரத்தை விவரிக்க வேண்டியதில்லை.

இதற்கு ஒரு முடிவுகட்ட, இவ்விரண்டு பெரிய நதிகளாலும் ''பாதிக்கப்படும்'' நேபாளம், இந்தியா, வங்கதேசம் ஆகிய மூன்று நாடுகளைக் கொண்ட ஒரு முத்தரப்பு கமிட்டி நிறுவ வேண்டும் என பல ஆண்டுகாலமாக இந்தியாவிடம் கோரி வருகிறது வங்கதேசம். இதன் மூலம் வெள்ளப் பெருக்கை குறைப்பதற்கும் அதை சரியான முறையில் பயன்படுத்துவதற்கும் அந்தந்த நாடுகளில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அதனதன் நீர்பிடிப்பு பிரதேசங்களை செவ்வனே பாதுகாக்கும் முறைகளை கூட்டாகச் சேர்ந்து ஆலோசித்து அமுல்படுத்தலாம் எனகோரியது. நியாயமான, சரியான, இக் கோரிக்கையை இந்தியா ஆரம்பத்திலிருந்தே நிராகரித்து வருகிறது.

'சரிசமமாக உட்கார்ந்து கூட்டாக சேர்ந்தெல்லாம் விவாதிக்க முடியாது! நேபாளத்திடம் விவாதிப்பது எனக்கு தெரியும்! உன் பிரச்சினையை மட்டும் நீ என்னிடம் சொல்லு, முடிந்தால் ஏதாவது செய்கிறேன்' என்று பேட்டை ரௌடி மாதிரி மிரட்டிப் பணிய வைக்க முயற்சிக்கிறது. அதில் குறிப்பிட்டளவு வெற்றியும் பெற்றுவிட்டது. மே.வங்க—வங்க தேச எல்லையில் கங்கை நதியின் குறுக்காக கட்டியிருக்கும் பராக்கா அணையிலிருந்து வெள்ளத்தின் போது திறந்து விடப்படும் நீர், வங்க தேசத்தில் பாய்ந்து சேதத்தை ஏற்படுத்துவதற்கு நட்ட ஈடாகவும் அதன் வடிகால் பிரதேசங்களை பாதுகாக்கவும் (ஆற்று வழியை ஆழப்படுத்தவும் அதன் கரையை உயர்த்தவும்) ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாயை மட்டும் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்கிறது.

இவ்விரு ஆறுகளின் இந்திய நீர் பிடிப்பு பிரதேசங்களை விஞ்ஞான ரீதியாக திட்டமிட்டு பராமரிக்காமல் வெள்ளத்தின் சீற்றம் முழுவதையும் வங்கதேசத்தில் இறக்கிவிடுகிறது. குறைந்தபட்சம் ஆற்றுப் படுகைகளில் ஆண்டுதோறும் பெருகும் நிலச்சரிவு, அரிப்புகளை தடுத்து நிறுத்துவதோ, கட்டுப்படுத்துவதோ இல்லை. மாறாக ஆற்றுப்படுகைகளில் இருக்கும் இயற்கையான காடுகளை கூட திருட்டுத்தனமாக அழித்து கள்ளத்தனமாக கடத்துவதுதான் நடக்கிறது. இதனால் மண் அரிப்பு ஏற்பட்டு வெள்ளப் பெருக்கும், அழிவின் கோரமும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வங்கதேச மக்கள் நிவாரணங்களுக்காக தட்டேந்திக் கொண்டிருக்கிறார்கள்.

மறுபுறம் ஆற்றின் போக்கை பயனுள்ள முறையில் திருப்பி, பல கிளைகளாக பிரித்து பாசனத்திற்கு பயன்படுத்துவதோ, பல அணைகள் எழுப்பி அதிக நீரை தேக்கி வைத்து பயன்படுத்துவதோ இல்லை. வெள்ளப் பெருக்கின்போது நீரை வடியவிட்டுவிட்டு, இருக்கும் ஒரே ஒரு பெரிய நீர்தேக்கமான பராக்கா அணையின் நீர்மட்டம்குறையும் போதெல்லாம் 'குறுக்கு' வழியில் அதை நிரப்பிக்கொள்கிறது. இமயமலை பனிப்பாறைகளின் மேல் ஹெலிகாப்டர்களைக் கொண்டு கரித்தூளை தூவி நீர்வரத்தை தன்னிச்சையாக அதிகப்படுத்திக் கொள்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு முறையும் தேவைக்கு அதிகமாக வந்து விழும் நீரை போதுமான முன்னெச்சரிக்கையில்லாமல் வங்க தேசத்தில் வடித்து விடுகிறது.

எல்லை தாவா, நதிநீர் பங்கீடு போன்ற எந்த பிரச்சினையானாலும் இப்படித்தான் அண்டைநாடுகள் மீது தனது ஆதிக்கத்தை நிறுவுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது பாசிச நேரு—இந்திரா—ராஜீவ் தலைமையிலான இந்திய ஆட்சி அதிகார கும்பல்.

மறுபுறம் இந்தியாவைவிட மிகவும் பின் தங்கிய உலகிலேயே வறியநாடான வங்கதேசம், தங்களது சொந்த நாட்டு மக்களிடமிருந்து உறிஞ்சும் வரிபணத்தில் மூன்றில் ஒரு பங்கை ராணுவத்துக்கு செலவிடுகிறது. வெள்ளத் தடுப்பு, பராமரிப்பு போன்ற உயிராதரமான விஷயங்களுக்கோ வெறும் சில கோடி ரூபாய்களை மட்டும் ஒதுக்குகிறது.

நாட்டின் தலைநகரமான டாக்கா நகரத்தை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க ஆண்டொன்றுக்கு அரசு செய்யும் செலவு ஒரு கோடி ரூபாய். இதுகூட நம் பண மதிப்புக்கு 46 லட்ச ரூபாய்க்குதான் சமம்!

வெள்ள அபாயத்தைக் கூட மக்களுக்கு சரியான நேரத்தில் எச்சரிப்பதில்லை. கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி பிழைப்புத் தேடிவரும் மக்கள் ஆற்றின் கரையோரங்களில் குவிவதை தடுப்பதற்கு எந்த மாற்று ஏற்பாடும் செய்வதில்லை. இதனால் வெள்ளம் வந்தால் ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் கூண்டோடு அழிவது ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

சர்வாதிகார எர்ஷாத் ராணுவக் கும்பல், பாதிக்கப்படும் மக்களின் எதிர்ப்புணர்விலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மாபெரும் தேசபக்தனாக வேடம் போட்டு தப்பிக்க முயலுகிறது. இவ்வளவு துயரத்துக்கும் காரணம் இந்தியாதான் என இப்போது ஒப்பாரி வைக்கிறது. நிவாரண உதவிக்காக இந்திய அரசு அனுப்பிய 4 ஹெலிகாப்டர்களை பயன்படுத்தாமல் திருப்பியனுப்பி விட்டது. இதன் மூலம் இந்திய அரசுக்கு தக்க பதிலடி கொடுத்து விட்டதாக மக்களை நம்பவைக்க முயலுகிறது. ஆனால் இதுநாள் வரையில் தனது சொந்த நாட்டு மக்களின்கருத்தை திரட்டி இந்திய பாசிச கும்பலின் ஆதிக்க, விஸ்தரிப்பு பேராசையை முறியடிக்க ஒரு துரும்பையும் எடுத்துபோடவில்லை, ராணுவ சர்வாதிகார கும்பல். மாறாக இந்திய பாசிசகும்பலின் ஆதிக்க வெறிக்கு விட்டுக் கொடுத்து தன்னுடைய ஆட்சியதிகாரத்தை பாதுகாத்துக்கொள்ள மறைமுக ஆதரவு கோரும் தேச விரோத கும்பலாகத்தான்சீரழிந்து கிடக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# இட ஒதுக்கீடு சலுகை:
# சமஉரிமையைக்கொடுக்குமா?

இந்திய அரசு, இந்து மதத்தின் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கும் சலுகைகளை கிருத்துவ மதத்தின் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் (கல்வி, வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு மற்றும் சலுகைகள்) வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கும் மாநாடு ஒன்று திருச்சியில் கடந்த செப்டம்பர் மாதம் 24, 25 தேதிகளில் நடைபெற்றது.

உயர்சாதி கிருத்துவ மத வெறியர்களால் திருச்சியில், கிருத்துவ தாழ்த்தப்பட்டவர்களுக்கென எழுப்பப்பட்டிருந்த தனிக் கல்லறையை அகற்றப் போனவர்களை ரௌடிகளை வைத்து கடுமையாக தாக்கிய, போராடிய மக்களை போலீசை ஏவி ஒடுக்கிய, பிரபல சாராய வியாபாரி, திருச்சி காங்கிரசு எம்.பி அடைக்கலராஜ்தான் இம்மாநாட்டின் அமைப்பாளராக இருந்து தாழ்த்தப்பட்ட கிருத்துவர்களின் உரிமைக்காக, நீலிக் கண்ணீர் வடித்தார்.

கிருத்துவ மதத்தைச் சேர்ந்த காங்கிரசுக் கட்சியின் மேகாலய மாநில முதல்வர் பி.எ சங்மா, மத்திய மந்திரி ஜேக்கப், பாண்டிச்சேரி மந்திரி ஜோசப் மரியதாஸ் மற்றும் கிருத்துவ மதத்தின் முப்பெரும் பிரிவுகளில் ஒன்றான கத்தோலிக்க மடாலயத்தின் பல உட்பிரிவுகளைச் சேர்ந்த தமிழகத்தின் பெரும்பாலான பேராயர், ஆயர்கள் (காஞ்சி சங்கராச்சாரி, மதுரை ஆதீனம், பங்காரு பண்டாரம் போன்ற பதவிகளுக்கு இணையானது) நூற்றுக் கணக்கில் கலந்துக் கொண்டு மாநாட்டை முன்னிருந்து நடத்தினார்கள்.

சென்னை — மறைமலையடிகள் நகரில் நடந்த காங்கிரசுக் கட்சியின் மாநாட்டுக்கு போடப்பட்டிருந்த பந்தலைவிட, மிகப் பெரும் பந்தல், சலுகை விலையிலும் (50 காசுகள்) இலவசமாகவும் 5 லட்சம் மக்களுக்கு தேவையான உணவு ஏற்பாடு, இன்னபிற பொழுது போக்கு அம்சங்கள் (ஒலி, ஒளி காட்சி, கரக ஆட்டம், மயில் ஆட்டம்) என பல கோடி ரூபாய் செலவில் இம்மாநாட்டை நடத்தி காங்கிரசுக்கு ஓட்டு வேட்டையாடியது அடைக்கலராஜ் கும்பல்.

"இந்தியாவில் உள்ள 2 கோடி கிருத்துவர்களில் 1·6 கோடி பேர் தாழ்த்தப்பட்டவர்களாகவும், மலைச்சாதியினராகவும் பின்தங்கியவர்களாகவும் உள்ளனர். இவர்கள் அரசால் தொடர்ந்து புறக்கணிக்கப் படுவதால், நான்காம்தர குடி மக்களாகவாழ்கிறார்கள். இந்திய அரசின் கெடுபிடியாலும், சலுகை மறுப்பாலும் பாதிக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் கிருத்துவர்கள் இந்துக்களாக மதம் மாறி விட்டார்கள். அங்கே அவர்கள் நல்ல பதவிகளையும், பல சலுகைகளையும் அனுபவிக்கிறார்கள்" என்று உண்மையும் பொய்யும் கலந்து, வந்திருந்த தாழ்த்தப்பட்ட கிருத்துவர்களிடம் இட ஒதுக்கீடு மூலம் கிடைக்கும் சலுகைகள் பற்றி பிரமையை ஊட்டியது உயர்சாதி கிருத்துவமத காங்கிரசுத் தலைமை.

சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கு அரசு அதிக் அக்கறை செலுத்துகிறது என்று நம்ப வைக்க அரசு செய்யும் மிகப் பெரும் மோசடி, இட ஒதுக்கீடு. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பத்து சதவீதத்திற்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே மருத்துவம், தொழில் நுட்பம், இன்னபிற உயர்கல்வி வாய்ப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் அரசு, ஆகப் பெரும்பான்மையாக உள்ள எழுபது சதவீதத்திற்கும் மேற்பட்ட பிற்பட்ட மக்களையும், தாழ்த்தப் பட்ட மக்களையும் இட ஒதுக்கீடு சலுகையின் மூலம் முன்னேற்ற போவதாக செய்யும் பம்மாத்தை ஏற்கனவே புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் பத்திரிக்கைகள் தோலுரித்துக் காட்டியுள்ளன.

ஆனால், வன்னியர் சாதிய சங்கம் போன்ற பல்வேறு சாதிய சங்கங்கள், தங்கள் சாதியில் இருக்கும் மேட்டுக்குடி கும்பலுக்கு ஆட்சி—அரசு பதவிகளில் மேலும் பங்கு பெறுவதற்கு ஆளும் கட்சியுடன் நடத்தும் பேரத்திற்கு வலு சேர்க்கும் பொருட்டு இடஒதுக்கீட்டை தங்கள் சாதியின் மொத்த மக்களுக்குமானதாக சித்தரித்து ஆதரவு திரட்டி போராட்டத்தில் குதிக்கின்றன.

மக்களை சாதிய ரீதியில் மோதவிட்டு ரத்தம் குடிக்கும் அரசின் செல்லப்பிள்ளைகளாக வலம் வருகின்றன. இதற்கு கிருத்துவ மதமும் விதிவிலக்கு




அல்ல. ஆளும் காங்கிரசுக் கட்சி தலைமையே இப்போராட்டத்தை கையில் எடுத்திருப்பதும் ஆச்சரியமல்ல!

இந்து மதத்தின் காட்டுமிராண்டித்தனமான சனாதனதர்மவழியிலான தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறைகளின் தளைகளிலிருந்து தப்பிக்க கிருத்துவமத மாற்றமே தலைசிறந்த மார்க்கம் என "அல்லேலுயா" பாடி தாழ்த்தப்பட்ட, பழங்குடி இந்துக்களை மதம் மாறவைத்தவர்கள்; இன்று இந்து மதத்தின் அசிங்கத்தையே தங்கள் மதத்திலும் அங்கீகரிக்கச் சொல்லி போராடுவதுதான் வேடிக்கை.

சிறுபான்மை மதம் என்ற சலுகையின் அடிப்படையில் தன்னுடைய கல்வி நிறுவனங்களுக்கு இந்திய அரசிடமிருந்து



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுதோறும் பெறும் 300 கோடி ரூபாய், தாங்கள் நடத்தும் சமூக சேவை நிறுவனங்களுக்கு உதவி பெறுவது என்ற பெயரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலி ருந்து பெறும் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களில் ஒரு சில பகுதியை ஒதுக்கினாலே நாட்டி லுள்ள 2கோடி கிருத்துவர்களுக்கு உயர்கல்வியையும், தரமான வாழ்க்கைக்கான வேலை வாய்ப்பையும், கிருத்துவ மத தலைமையால் கொடுக்க முடியும். மாறாக, அப்பணத்தைக்கொண்டு கடைச்சரக்காக கல்வியை வியா பாரம் செய்து மேலும் பணம் குவிக்கிறது. மடாலயங்கள் என்ற பெயரில் தமிழகத் தின் குக்கிராமங்களிலிருந்து அனைத்து பெரு நகரங்கள் வரை அரண்மனை—அந்தப்புரம் போன்று கட்டிடங்கள், பெருந் தோட்டங்கள் எழுப்பிக் கொண்டு சகலவசதிகளுடன் கூத்தடிக் கிறார்கள், பேராயர்களும் ஆயர் களும்.

அவ்வளவு ஏன், அதன் மடாலயங்களில் பேராயர்களாக வும், ஆயர்களாகவும் பதவிக்கு வருபவர்கள்கூட பணம் படைத்த உயர்சாதி கிருத்துவர்கள்தான். அவர்களுடைய புள்ளி விபரப் படியே 80 சதவீதமாக உள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடிகளி லிருந்து இப்பதவிகளுக்கு தேர்ந் தெடுக்கப்படுபவர்கள் வெறும் 3 சதவீதத்தினர்தான்.

இந்து மத்தின் காட்டு மிராண்டித்தனமான தீண்டாமை, சாதிய ஒடுக்கு முறைகளிலிருந்து மீள மதம்மாறிய தாழ்த்தப்பட்ட இந்துக்கள் கிருத்துவ மதத்திலும் அக்கொடுமைகள் நீக்கமற நிறைந்திருப்பதைக் கண்டு, தீர்வு மதமாற்றத்தில் இல்லை என்பதை அனுபவ பூர்வமாகவே உணர்ந்து வருகிறார்கள். வழிபாட்டிலிருந்து சுடுகாடுவரை உயர்சாதி கிருத்து வர்களால் தீண்டதகாதவர்களாக நடத்தப்படும் தாழ்த்தப்பட்ட கிருத்துவர்கள் கிருத்துவமதத் தலைமையின்மீது வெறுப்பும் விரக்தியும் கொண்டுள்ளனர்.

எதிர்ப்பு, கலகமாக உரு வெடுப்பதை தவிர்க்கவும், கிழிந்துபோன கிருத்துவ மதத் தின் சமத்துவ முகமூடிக்கு ஒட்டு போடவும் இட ஒதுக்கீட்டு சலுகை கேட்டு தாழ்த்தப்பட்ட வர்களின் நண்பனாக நடிக்கிறது உயர்சாதி கிருத்துவமததலைமை. சட்டம் போட்டு சிறுபான்மை மதத்தின் தாழ்த்தப்பட்டவர் களுக்கு இடஒதுக்கீட்டு சலு கையை மறுத்த காங்கிரசு இப்போது அச்சட்டத்தை ரத்து செய்யும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறது. தமி ழகத்தின் ஆட்சிக் கட்டிலின்மீது அவ்வளவு ஆசை கொண்டலை கிறது காங்கிரசு கட்சி.

''தேசிய'', திராவிடக் கட்சிகள்,மதப் பண்டாரங்கள் பிரச்சாரம் செய்வதுபோல் சமூக—பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் களைவதற்கு இடஒதுக்கீடு தீர்வாக அமை யாது. பல்வேறு சாதியினரை மோதவிட்டு ஓட்டுப் பொறுக்கி கள், மதப்பண்டாரங்கள் திரும்ப வும் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளத்தான் . பயன்படும். கைளயவே ஆன ஒரு சிறு பிரிவினர் ஆட்சி, அரசு பதவிகளை பிடிக்கத்தான் இது பயன்படும்.

உதாரணத்திற்கு, குறிப்பாக உயர்மட்ட கல்வி, மற்றும்வேலை வாய்ப்பு இடங்களில் பழங்குடி மற்றும் தாழ்த்தப்பட்டவர் களுக்கு என இருக்கும் 20 சதவீதம் இட ஒதுக்கீட்டில் இரண்டு சதவீதம்கூட பயன் படுத்தப்படவில்லை. காரணம் பெரும்பான்மையான தாழ்த்தப் பட்ட பழங்குடி குழந்தைகளுக்கு ஒருவேளை உணவே எட்டாக் கனியாக இருக்கும்போது ஆயிரம் சலுகை கொடுத்தாலும் படிப் பைப்பற்றி அவர்கள் நினைத்துப் பார்க்க முடியுமா?

மிகப் பெரும்பான்மையினரும் கூலி ஏழை விவசாயிகளுமான பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் கிருத்துவர்கள், இந்துக்கள் என மதரீதியிலும் சாதி ரீதியிலும் பிளவு படுவதை கைவிட்டு வர்க்கரீதியிலஒன்றிணையவேண் டும்.

பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு அடிப்படையாய் இருக்கும் இக்கேடுகெட்ட சுரண்டல் அமைப்பை வீழ்த்தி விட்டு, உழைக்கும் மக்களின் கரங்களில் அதிகாரத்தையும் உழுபவர்கள் அனைவருக்கும் நிலத்தையும் பங்கீடு செய்யும் புதிய ஆட்சியதிகாரத்துக்காகப் போராட முன்வர வேண்டும்.

● பச்சையப்பன்

## பொதுச்சேவை என்ற பெயரில் பெருங்கொள்ளை

மன்னார்குடி, கீழ் ஒத்தைத் தெருவில் வசிக்கும் இராமாமிர்த அய்யர் என்பவர், அதே தெருவி லிருக்கும் கணபதி விலாசு நடுநிலை பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர். இவர் அதே தெருவில், சமூக நலதுறையிடமிருந்து உதவி பெற்று, இலவச மாணவர் விடுதியை நடத்தி வருகிறார். இவர் ஒரு சாதிய வெறிபிடித்த பார்ப்பனர். இந்த விடுதியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தான் அதிகமாக படிக்கின்ற னர்.

மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. வசந்தா தேவி என்கிற பார்ப்பன அம்மையாரையும், மன்னார்குடியில் உள்ள துணை சமூகநல அலுவலர் அவர்களை யும், தனக்கு சாதகமாக்கி கொண்டு பல தில்லுமுல்லுகளை, அயோக்கியத் தனமான காரியங் களை செய்து வருகிறார்.

மாணவர்கட்கு சமூக சேவை செய்கிறேன் என்று அரசிடம் சொல்லி, சலுகையும் பெற்றுக் கொள்கிறார். மாணவர்கட்கு வயிற்றுக்கு போதுமான அளவு உணவு கொடுப்பது கிடையாது. அப்படி கொடுக்கப்படுகிற உண வும் சுகாதாரமான சுத்தமான உணவாக கொடுப்பது கிடை யாது. உணவில், பூச்சிகள், ஆணி, இரும்புத் துண்டு போன்ற பொருட்கள் தினசரி கிடக்கின் றன.

அவர்கட்கு முறையாக மாதாமாதம் முடிவெட்டி விடுவது கிடையாது. 6 அல்லது 7 மாதத் திற்கு ஒரு முறை முடிவெட்டி விட்டு, மாதாமாதம் வெட்டி விட்டதாக முடிதிருத்தும் தொழி லாளியை மிரட்டி கையொப்பம் வாங்கி கொள்கிறார். ஊதிய பதிவேட்டில் அவரிடம் 400 ரூபாய்க்கு கையொப்பம் வாங்கிக் கொண்டு 200 ரூபாய்தான் கொடுத்து வருகிறார். இதை எதிர்த்துக் கேட்ட பன்னீர் செல்வம் என்பவரை மிரட்டி நான்கு ஆண்டுகள் வேலை பார்த்த அந்த ஊழியர் ஊதியத்தில் பிடித்த தொகையை யும் தராமல் பணியிலிருந்து நீக்கி விட்டார்.

ஊழியர்களின் வருகைப் பதி வேட்டையும் முறையாக பரா மரிப்பது கிடையாது. ஒவ்வொரு மாதத்தின் இறுதியில்தான், வருகையை பதிவு செய்வார். ஊழியர்கள் யாரேனும் உரிமை களை கேட்டால் நீ ஒரு மாதமாக பணிக்கு வரவில்லை. எனவே உன்னை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாது என்று திமிராக கூறி, அவர்களது உழைப்பை உறிஞ்சி கொழுத்துத் திரிகிறார்.

மாணவர்களும் உழைக்கும் ஊழியர்களும் சுரண்டிகொழுக்கும் இந்த சுயநல வாதிக்கு—பகல் வேடதாரிக்கு பாடம் புகட்டும் நாள் நெருங்கிக் கொண்டிருக் கிறது.

தகவல் :
சிவக்குமார், மன்னார்குடி.



படிப்பகம்

www.padippakam.com

# போலிக் கம்யூனிஸ்டுகளின் போலீஸ் ராஜ்ஜியம்



புரட்சி செய்யப் போவதாக மார்தட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு போலீசு அட்டூழியங்கள் — அத்துமீறல்களின் போதும்வழக்கம் போலவே நீதி விசாரணை கோருவதோடு 'வங்கத்தைப் பார்! போலீசு கொடுமை என்ற பேச்சுக்கே அங்கே இடமில்லை. இடதுசாரி கூட்டணி ஆட்சிக்கு வந்தபிறகு போலீசுக்காரர்கள எல்லாம் புத்தர்களாக மாறி விட்டனர்' என்ற பாணியில்பிரச்சாரம் செய்து அணிகளையும் மக்களையும் ஏய்ப்பதைத் தொழிலாகக்கொண்டுள்ளனர்.

ஆனால் போலீசு அட்டூழியங்களுக்கு 'இடதுசாரிகள்' ஆளும் மேற்கு வங்கம் விதிவிலக்கானதல்ல. இதர எல்லா மாநிலங்களையும் விஞ்சும் வண்ணம் 'இடதுசாரி' போலீசுக்காரர்கள் கொலைகாரர்களாகவும், கொட்டடிகள் கொலைக் கூடாரங்களாகவும் போலிகளின் ஆட்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக போலீசு காவலில் விசாரணைக் கைதிகள் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுவதும், வழக்கம் போலவே கைதி தற்கொலை செய்து கொண்டதாகப் புளுகுவதிலும் 'இடதுசாரி' போலீசு கும்பல் புதிய சாதனையே படைத்துள்ளது.

● மேற்கு வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த பிராவஷ் கோலே என்பவர் ஒரு கார் திருட்டு வழக்கு சம்பந்தமாக போலீசாரால் கடந்த ஆண்டு அக்டோபர் 16 அன்று கைது செய்யப்பட்டார். அடுத்த நாள் கல்கத்தா லால்பஜாரிலுள்ள போலீசு தலைமை நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். அக்டோபர் 18 அன்று கல்கத்தா மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே மருத்துவர்கள் அவர் இறந்து பலமணி நேரமாகி விட்டதாக அறிவித்தனர். வழக்கம் போலவே போலீசு கும்பல் அவர் திடீரென இதய அடைப்பால் இறந்து போனதாகப் புளுகியது.

● கடந்த ஆண்டு அக்டோபர் 22ம் நாளன்று மித்னாபூர் மாவட்டத்தைச் சேர்ந்த அறுபது வயது நாகேந்திர கோலே கைது செய்யப்பட்டார். பெண்களை விபச்சாரத்திற்கு விற்கும் தரகு வேலை செய்ததாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. கேஷபூர் போலீசு நிலையத்திற்கு இழுத்து வரப்பட்ட அவர் அதே நாளில் போலீசு கொட்டடியில் பிணமானார். அவர் தற்கொலை செய்து கொண்டதாக போலீசு கும்பல் பசப்பியது. ஆனால் உள்ளூர் மக்கள் விடவில்லை. போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்து சாலை மறியலில் இறங்கினர். **பிணத்தைக் கைப்பற்றி தாங்களே மருத்துவமனைக்குகொண்டு சென்றனர்.**

● சென்ற ஆண்டு அக்டோபர் 24ந் · தேதியன்று மனாகர் ஜெய்ஸ்வால் என்ற இருபது வயது இளைஞன் கைது செய்யப்பட்டு கல்கத்தா ஜோரசான்கோ போலீஸ் நிலையத்தில் பிணமானான். "ஜெய்ஸ்வால் ஒரு ரௌடி. அவன் இன்னொரு கும்பலுடன் மோதி படுகாயமுற்ற நிலையில் கைது செய்யப்பட்டான். ஆனால் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லு முன்னரே இறந்து விட்டான்" என்று கூசாமல் புளுகியது போலீசு கும்பல். ஆத்திரமடைந்த பகுதி வாழ் மக்கள் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு நீதி விசாரணை கோரினர். அதன்



படிப்பகம்

www.padippakam.com

பிறகு கண்துடைப்புக்காக விசாரணை நாடகமாடி இரு சப் இன்ஸ்பெக்டர்களும்ஒரு கான்ஸ்டபிளும் சில நாட்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர். ஆனால் கொலைகாரர்களான போலீசு கும்பலுக்கு தண்டனை ஏதும் தரப்படவில்லை.

இவை கடந்த ஆண்டில் நடந்த 'இடதுசாரி' போலீஸ் காட்டுமிராண்டித்தனத்துக்கு ஒரு சாட்சிகள்தான். இவை தவிர இன்னும் போலீஸ் கொட்டடியில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை நீண்டு கொண்டே போகிறது. பீகார், உ.பி. மாநிலங்களில் காக்கிச் சட்டை கயவாளிகள் சாதாரண குற்றவாளிகளைப் பிடித்து அவர்களின் கண்களில் திராவகம் ஊற்றியும், கோணி ஊசியால் குத்தியும், கைகால் முட்டிகளை உடைத்தும் 'நீதி'யை நிலைநாட்டினர் என்றால், மேற்கு வங்க போலீசார் அதை விட ஒருபடி முன்னேறி கொலை செய்வதையே தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். இன்று நேற்றல்ல. நீண்ட காலமாகவே இக் காட்டுமிராண்டித்தனம் தொடர்ந்து வருகிறது.

கள்ளக் கடத்தல் குற்றம் சாட்டப்பட்டு 1984 மார்ச் இறுதியில் முகம்மது இத்ரீஸ் என்பவர் கல்கத்தா லால்பஜார் போலீசாரால் கைது செய்யப்பட்டார். அடுத்த நாளே போலீசு கொட்டடியில் அவர்பிணமானார். இதைத் தொடர்ந்து பகுதிவாழ் மக்கள் போலீசு அக்கிரமத்துக்கு எதிராகப்போராடி நீதி விசாரணை கோரினர். பொது மக்கள் நிர்ப்பந்தம் காரணமாக வேறு வழியின்றி 'இடது சாரி' அரசு விசாரணைக் கமிஷனுக்கு ஒப்புக் கொண்டது. இதற்கிடையே பிரதப் பரிசோதனை அறிக்கை வெளிவந்து, அதில் இத்ரீஸ் கைகள் பின்புறமாக கட்டப்பட்ட நிலையில் இரும்புத்தடியால் பலமாகத் தாக்கப்பட்டதால் மரணமடைந்துள்ளார் என்று மருத்துவர்கள் கூறியிருந்தனர். இதோடு இந்திய வர்த்தக ஆராய்ச்சிக் கழகம் இத்ரீசின் மர்மச்சாவு குறித்து நடத்திய கருத்துக் கணக்கெடுப்பில் 94 சதவீத கல்கத்தாவாசிகள், அவர் போலீஸ் கொட்டடியில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டுள்ளார் என்றே அபிப்பிராயமாககூறினர்.

**போலீசு கும்பல் மக்களிட**மிருந்து முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப்போன சூழ்நிலையில் போலிக் கம்யூனிஸ்டுகள் என்ன செய்தார்கள்? மற்றெல்லா ஓட்டுக் கட்சி அரசு

---

## ஊருக்குத்தான் கம்யூனிச உபதேசம்!

மேற்கு வங்கத்தின் திருவாளர் பரிசுத்தம், 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசுவின் அருமை வாரிசு சந்தன் பாசு ஒரு முதலாளி என்பது ஊரறிந்த விஷயம். தங்கள் கொள்கைப் பிடிப்பு காரணமாக தந்தையும் மகனும் இரு துருவங்களாகி விட்டார்களே என்று விபரம் புரியாதவர்கள் மூக்கின் மேல் விரலை வைப்பார்கள்.

ஆனால் பரிசுத்த முதல்வர் ஜோதிபாசுவுக்கு கொள்கையை விட மகன் மீதுதான் பாசம் அதிகம். தனது மகன் வேலை செய்த நிறுவனத்துக்கு முறைகேடாக ஏராளமான அரசு சலுகைகளைக் கொடுத்ததன் மூலம், அவர் தனது மகனுக்கு மறைமுகமாக உதவி செய்துள்ளார். இதற்காக தமது பதவியைக் கேடாகப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று ஆளும் இடதுசாரி கூட்டணியிலுள்ள பொதுப்பணித் துறை அமைச்சர் ஜதின் சக்கரவர்த்தி இப்போது பகிரங்கமாக அம்பலப்படுத்துகிறார்.

பத்தாண்டுகளுக்கு முன்பு முதல்வர் ஜோதிபாசுவின் மகன் சந்தன்பாசு 'பெங்கால் லேம்ப்ஸ்' என்ற மின்விளக்கு நிறுவனத்தில் சாதாரண அதிகாரியாக வேலையில் இருந்தார். ஆதாயமில்லாமலா முதல்வர்மகனை வேலைக்கு வைத்துக் கொள்ளும் அந்நிறுவனம்? 1979 ஆண்டு இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரும், சந்தன் பாசுவும் பொதுப் பணித்துறை அமைச்சரை சந்தித்து, அரசுக்குத் தேவையான மின் விளக்குகளை தங்கள் நிறுவனத்திடமே வாங்கக் கோரினர்.

இதைத் தொடர்ந்து முதல்வர் ஜோதிபாசுவும், ''பெங்கால் லேம்ப்ஸ் நிறுவனம், ஒரு சிறு தொழில் நிறுவனம் என்பதால், அரசு கொள்முதல் செய்யும் மின் விளக்குகளில் 38 சதவீதத்தை இந்நிறுவனத்திடமிருந்து வாங்கும்படி'' சிபாரிசு செய்து பொதுப் பணித்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதினார். அதன்படியே பொதுப்பணித்துறை, இந்நிறுவனத்திடமிருந்து' கோடிக் கணக்கில் மின் விளக்குகள் வாங்குவது வழக்கமானது.



மகன் - பேத்திகளுடன் ஜோதிபாசு

மற்ற மின்விளக்கு நிறுவனங்கள்'இடதுசாரி' அரசின் இக்கேடுகெட்ட கொள்கைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும்வரை 10 ஆண்டுகாலம் இந்த மோசடி தொடர்ந்து நடந்துள்ளது. முதல்வர் ஜோதிபாசுவும் தனது குட்டு வெளிப்படாமலிருக்க தான் எழுதிய கடிதங்களையும், சிபாரிசு குறிப்புகளையும் கோப்புகளில் பதிவு செய்ய வேண்டாமென்று பொதுப் பணித்துறை அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது ஒரு புறமிருக்க மே. வங்கத்தில் சிறு தொழில் நிறுவனங்களில் தொழில் நெருக்கடி ஏற்பட்டு அதன் விளைவாக பெங்கால் லேம்ப்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் போராடியபோது, 'மார்க்சிஸ்டு' தொழிற்சங்கமான சிஐடியு நிர்வாகத்தோடு கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டு போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்தது.

ஆளும் இடதுசாரி கூட்டணியிலுள்ள 'மார்க்சிஸ்டு' கட்சிக்கும், புரட்சி சோசலிஸ்டுக் கட்சிக்குமிடையே சமீபத்தில் எழுந்த உரசல் காரணமாக, புரட்சி சோசலிஸ்டு கட்சியைச் சேர்ந்த பொதுப்பணித்துறை அமைச்சரே இப்போது இவற்றை அம்பலப்படுத்துகிறார். உண்மைகளை தமது கூட்டணி மந்திரியே அம்பலப் படுத்தியதால் தேள் கொட்டிய திருடனாகமுழிக்கிறது 'மார்க்சிஸ்டு' கட்சி.



படிப்பகம்

www.padippakam.com

களைப் போலவே விவகாரத்தை அப்படியே அமுக்கிவிட்டு, குற்றவாளிகளான போலீசு கும்பலைத் தப்புவிக்கும் 'புரட்சிப் பணியில்' இறங்கினார்கள். பொது மக்கள் கோபத்தைத் திசை திருப்புவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் நான்கு ஆண்டுகளாகியும் இன்றுவரை இன்னும் முடியவில்லை. இக்கமிஷனின் தலைவராக உள்ள நீதிபதி சமரேந்திர சந்திராதேவ் வரும் நவம்பரில் எப்படியும் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுவிடும் என்று நம்பச் சொல்கிறார்! இதில் வேடிக்கை என்னவென்றால் நாடெங்கும் விசாரணைக் கமிஷன்கள் இழுத்தடிக்கப்படும் போதெல்லாம் போலிக் கம்யூஸ்டுகள் அதற்கெதிராக கண்டனம் தெரிவிக்கத் தயங்குவதில்லை!

மேற்கு வங்கத்தில் காங்கிரசின் அவசரநிலை பாசிச கொடுங்கோலாட்சியில் 1971லிருந்து 1976 முடிய போலீசு கொட்டடியில் 67 பேர் மாண்டனர். அவர்களில் பெரும்பாலோர் நக்சல்சாரிப் புரட்சியாளர்களும், இன்று வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'க் கட்சி ஊழியர்களுமாவர். இப்படுகொலைகளுக்கு காரணமான எந்தவொரு போலீசு அதிகாரி மீதும் காங்கிரசு ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்தக் கொடுமைகளைப் பிரச்சாரம் செய்தே 1977ல் ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டுகள் அப்போலீசு அதிகாரிகளைத் தண்டிக்கவே இல்லை. ஏன், விசாரிக்கக்கூட இல்லை. மாறாக, கொலைவெறி பிடித்த போலீசு கும்பலோடு கை கோர்த்துக் கொண்டு காங்கிரசு கொடுங்கோலாட்சிக்கு சற்றும் குறையாமல் போலீசு கொட்டடிப் படுகொலைகளைத் தீவிரப் படுத்தியே வந்துள்ளனர். போலிகள் ஆட்சிக்கு வந்த 1977லிருந்து 1988 ஆகஸ்டு வரை இதுவரை 53 பேர் போலீசு கொட்டடியில் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

இதுதான் போலீசு கொடுமைகளுக்கு எதிராக நிற்கும் போலிக் கம்யூனிஸ்டு ஆட்சியின் லட்சணம்! இதுதான் மேற்கு வங்க போலீசை மக்களின் நண்பர்களாக மாற்றியுள்ளதாகப் பீற்றிக் கொள்ளும் போலிகளின் யோக்கியதை!

போலிகள் ஏய்ப்பதைப் போல சட்டபூர்வ சமூக விரோத கும்பலான போலீசை ஒருக்காலும் திருத்தவோ மாற்றவோமுடியாது.

அது அரசு எந்திரத்தின் ஒரு அங்கம். அடக்குமுறைக்கான அமைப்பு. ஆளும் வர்க்கங்களின் நலன்களைக் காப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள வன்முறை நிறுவனம். பரந்துபட்ட மக்களை அடக்கி ஒடுக்குவதற்கென்றே தீனி போட்டு வளர்க்கப்படு கொடிய மிருகம். போலிகள் நம்புவதைப்போல இந்த வன்முறைக் கும்பலை அப்படியே சீரமைத்து புரட்சிக்கு சாதகமாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான அடிப்படையே இல்லை. கடந்த 11 ஆண்டுகால போலிகளின் ஆட்சி போலீசை மயிரளவும் திருத்த முடியாது என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. அதோடு கொலைகார போலீசு கும்பலோடு கைகோர்த்துக் கொண்டு அதன் கோர முகத்தை மூடி மறைக்கும் சமூக பாசிஸ்டுகளாக போலிக் கம்யூனிஸ்டுகள் சீரழிந்து கிடப்பதையும் பளிச்சென படம் பிடித்துக் காட்டுகிறது.

மனோகரன்

## கோட்டமடித்த போலீசு குட்டுப்பட்டு முழிக்கிறது

மங்கலம்- திருவண்ணாமலை புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பில், அவதூறு தடைச் சட்ட மசோதாவுக்கு எதிராக எழுதி வைத்த தட்டியை உள்ளூர் போலீசு நாய்கள் தூக்கிச் சென்றிருக்கலாம் என ஊகிக்கிறோம் என்று சென்ற இதழ் புதிய ஜனநாயகத்தில் வந்த செய்தியை அடுத்து, உள்ளூர் போலீசு கும்பல் தேள் கடித்த குரங்காக மாறி பகுதி மக்கள் மீதும் தோழர்கள் மீதும் விழுந்து புராளுகிறது. ஊகித்த செய்தியும் உண்மையாகிவிட்டது. ஏட்டு செல்வராஜ் என்ற போலீசு நாய்தான் அதை கவ்விச் சென்றது என்ற உண்மை இப்போது அம்பலத்திற்கு வந்துவிட்டது. பொறுக்க முடியவில்லை போலீசுக் கும்பலுக்கு; புதிய ஜனநாயகம் பத்திரிக்கையைப் படிப்பவர்களைக்கூட "குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தில் உள்ளே தள்ளப் போவதாக" ஊர் முழுக்க ஓலமிட்டு வருகின்றன.

புதிய ஜனநாயக வாசகர் வட்ட தோழர்களை நேரிடையாக விசாரிக்க வக்கற்ற எஸ். ஐ. வரதன் தலைமையிலான போலீசு கும்பல் தோழர்களின் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் கண்டதை கதைத்து பீதியூட்டும் 'வீரச்' செயல்களில் இறங்கியுள்ளது. இக்கும்பல் மாற்றலாகிப் போவதற்குள் "ஏதாவது(!) செய்துவிட்டுப் போகப் போவதாகவும், விலங்கு போட்டு நடுத்தெருவில் இழுத்து




செல்லாமல் விடப் போவதில்லை என்றும், சுட்டுக் கொல்லாமல் விடப் போவதில்லை" என்று ஜன்னி கண்ட கும்பல் போல் ஓயாமல் பிதற்றிக் கொண்டிருக்கின்றன.

"இவர்களை (தோழர்களை) விரைவில் அரசாங்கம் கடுமையாக ஒடுக்கப் போகிறது, இவர்களை விரைவில் நாடு கடத்தி விடுவார்கள்" என்று கூறுகிறது. போதாக் குறைக்கு, தோழர்கள் இரவில் போஸ்டர் ஒட்டினால் முக்காடு போட்டுக் கொண்டு போலீசு கும்பல் மோட்டார் சைக்கிளில் வட்டமடித்து, தோழர்களை விடாமல் கண்காணித்துக் கொண்டிருப்பதாக வெளியில் வீண் ஜம்பம் வேறு!

புதிய ஜனநாயக வாசகர் வட்டம், போலீசுக் கும்பலின் ஆபாச வக்கிர, சாராய போதை வாழ்க்கையை தொடர்ந்து வெளி உலகுக்கு கொண்டு வருவதாலும், பகுதி மக்கள் மீது போலீசுக் கும்பல் கட்டவிழ்த்து விடும் அடக்கு முறைகளை உறுதியாக எதிர்ப்பதாலும், முன்புபோல் கேட்பாரற்று போலீசு கும்பல் அதன் சட்ட விரோத, சமூக விரோத ஆபாச நடவடிக்கைகளை தொடர முடியவில்லை என்பதால் வாலறுந்த நரியாக ஓயாமல் ஊளையிட்டுத் திரிகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



# இந்திரா கொலைவழக்கு:

# நீதிக்கு விலங்கு! நிரபராதிக்கு தண்டனை

பரபரப்பான பாசிச இந்திரா கொலை வழக்கில் தூக்குக் கயிற்றை எதிர்நோக்கி தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 3 பேரில் ஒருவரான பல்பீர்சிங் நிரபராதி என்று இருமாதங்களுக்கு முன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். கொலை வழக்கில் சிக்கவைத்து, மரண தண்டனையை கீழ்கோர்ட்டுகள் உறுதிப்படுத்திய பிறகு, உச்சநீதிமன்றம் அவர் நிரபராதி என்று தீர்ப்பு வழங்கியிருப்பது உலக அதிசயங்களில் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அரசு எந்திரத்தின் அங்கங்களான போலீசும் கோர்ட்டும் சிறையும் எப்படியெல்லாம் ஒரு நிரபராதியை ஆட்டிப்படைத்துள்ளன என்பதற்கு பல்பீர்சிங்கின் வழக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக உள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட பாசிச இந்திராவின் சிறப்புக் காவலர்களில் ஒருவராகப் பணியாற்றியவர் பல்பீர்சிங். இந்திரா வீட்டின் பிரதான வாயிலில்—'கேட்'டில் காவல் நிற்பது அவர் வேலை. பெரும்பாலும் அவருக்கு இரவு நேரப் பணியே ஒதுக்கப்பட்டிருந்தது. 1984 அக். 30ம் நாளன்று வழக்கம்போலவே இரவுப் பணி முடிந்து அக் 31 அன்று காலை ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். வானொளியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த விளையாட்டுப் போட்டியை அவர் பார்த்துக் கொண்டிருந்தபோது இந்திரா சுடப்பட்டதாகவும், ஆனால் கவலைப்பட வேண்டாம் என்றும் இடையிடையே செய்தி வாசிக்கப்பட்டது:

அன்று மாலை அவர் மீண்டும் பணிக்குச் சென்றபோது, இந்திரா மரணமடைந்ததால் அனைத்து சீக்கிய சிறப்பு காவலர்களும் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. எனவே அவர் வீடு திரும்பி விட்டார்.

அடுத்த நாள் நவம்பர் 1ந் தேதி அதிகாலை 4-30 மணிக்கு பெருங்கும்பலாக ஜீப்பில் வந்த டெல்லி போலீசார் பல்பீங்சிங் வீட்டை தலைகீழாகப் புரட்டி, சீக்கிய பயங்கரவாத மதகுரு பிந்தரன்வாலே எழுதிய ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தனர். பல்பீரையும் கைது செய்து இழுத்துச் சென்றனர்.

கைது செய்த பல்பீர்சிங்கை கோர்ட்டுக்கு கொண்டு வராமல் பல போலீசு நிலையங்களுக்கு இழுத்துச் சென்று ரகசிய விசாரணை நடத்தினர். சட்ட விரோதமாக 33 நாட்கள் அவரைக் கைது செய்து வைத்திருந்து, பொய் வழக்கொன்றை திறமையாக



பல்பீர்சிங் தன் குடும்பத்தினருடன்

சோடித்த பிறகே வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வந்தனர்.

புதுடெல்லி நஜாப்கார் பேருந்து நிலையத்தில் பொதுமக்களிடம் வன்முறையைத் தூண்டும் வகையில் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தபோது நவம்பர் 3ம் தேதியன்று போலீசார் அவரைக் கைது செய்ததாகவும், இந்திரா கொலை தொடர்பான சதிக்கு உடந்தையாய் இருந்தார் என்றும், அதை நிரூபிக்கும் சில ஆவணங்கள், டைரிக்குறிப்புகளை போலீசார் கைப்பற்றியுள்ளதாகவும் பொய்வழக்கு சோடிக்கப்பட்டது.

'உலக மகா தலைவி' இந்திராவை அவரது மெய்க்காவலர்களான சாதாரண சப்—இன்ஸ்பெக்டர்களே சுட்டுக்கொன்றுவிட்டனர் என்றால் அது இந்திராவின் பெருமைக்கு இழுக்காகுமே! எனவே பெரிய தீவிரவாத கும்பல் சதி செய்து கொன்றதாக, அன்னியக் கரம் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காட்டி பெருமை சேர்க்க வேண்டுமென்பதற்காகவே இப்படியொரு பொய் வழக்கை சோடித்தார். விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு உண்மையை ஆராயும் புனிதமான அமைப்பாக சித்தரிக்கப்படும் மத்தியப் புலனாய்வுத் துறை (CBI)தான் இப்படியொரு கீழ்த்தரமான பொய் வழக்கை சோடித்தது. அதன்படி பல்பீர்சிங் டெல்லி திஹார் சிறையில் தனிமைக் கொட்டடியில் அடைக்கப்பட்டார்.

இவை அத்தனையும் பொய்; தான் நிரபராதி என்று எவ்வளவோ மன்றாடினார் பல்பீர்சிங். ஆனால் போலீசாரோ, குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லியும், இல்லையேல் அவரது குடும்பத்தையே அழித்து விடுவதாக



படிப்பகம்

www.padippakam.com

வும் மிரட்டினர். மறுபுறம் காலிஸ்தான் கமாண்டோ படைத் தலைவருக்கு இந்திரா கொலையில் தொடர்பிருப்பதாக சொன்னால், குறைந்தபட்ச தண்டனையோடு விடுதலை செய்வதாக ஆசை காட்டினர். பல்பீர்சிங்கின் அண்ணன் குடும்பத்தினரிடம் விசாரணை என்ற பெயரில் அடிக்கடி வந்து பீதியூட்டினர். உடல் ரீதியான சித்திரவதையை விட மன ரீதியான கொடூர சித்திரவதைகளால் அவர் பைத்தியமாகும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இதற்கிடையே செஷன்ஸ் கோர்ட்டும், டெல்லி உயர்நீதி மன்றமும் போலீசின் பொய் வழக்கிற்கு முட்டுக்கொடுத்து அவர் இந்திராவின் கொலைக்குக் காரணமானவர் என்று தீர்ப்பளித்து மரண தண்டனை விதித்தது. அவரதுவேலையையும் அரசு பறித்துக் கொண்டது. அவரோடு சேர்ந்து அவரது குடும்பமும் நிர்கதியாய் நின்றனர்.

இதற்கிடையே இந்திரா கொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட அனந்தராம் விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. ஆனால் ராஜீவ் அரசு எந்த விசாரணைக் கமிஷன் அறிக்கையையும் அரசு விரும்பினால் தான் வெளியிடும் என்று கூறி சட்டமும் இயற்றி அறிக்கையை வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தது. இந்திரா கொலையில் குற்றம் சாட்டப்பட்ட மற்ற இருவரான சத்வந்த்சிங்கும், கேஹார்சிங்கும் அந்த அறிக்கைகளைக் கோரியும் கூட அவர்களுக்கும் தராமல் அரசு மறைத்துவிட்டது.

இதன் பிறகு மேல் முறையீட்டுக்காக பல்பீர்சிங் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். எந்த கிரிமினல் வழக்கறிஞரும் அவருக்காக வாதாட முன்வரத் தயங்கினர். காரணம், தேசத்தின் பிரதமரையே சுட்டுக் கொன்ற சதிகார கும்பலுக்கு ஆதரவாக வாதாடுவது அவமானகரமானது—அநியாயமானது என்று அரசே மறைமுகமாகபிரச்சாரம் செய்தது. அதன் பிறகு பிரபல வழக்கறிஞர் ராத்ஜெத்மலானி இவ்வழக்கை ஏற்று நடத்தி போலீசார் சோடித்த பொய் வழக்கை அம்பலப்படுத்தி பல்பீர் சிங் நிரபாரதி என்று நிரூபித்தார். வெறும் துண்டு சீட்டில் எழுதிய வார்த்தைகளையும், டைரியில் துண்டு துண்டாக எழுதிய சில குறிப்புகளையும் காட்டி ஏதோ பெரிய சதிக்கான ரகசிய ஆவணங்களை கைப்பற்றியதாக போலீசார் ஆடிய நாடகம் அம்பலமானது. உச்சநீதிமன்ற நீதிபதிகளேபோலீசார் ஆடிய நாடகத்தை சகிக்க முடியாமல் தமது தீர்ப்பில்சாடியுள்ளனர். பல்பீர் சிங் நிரபாரதி என்று நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நான்கு ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவரை உச்ச நீதி மன்றம் விடுதலை செய்தது.

நிரபராதி பல்பீர் சிங்கின் விடுதலையை வரவேற்றும், சரியான தீர்ப்பு வழங்கிய உச்ச நீதி மன்றத்தை வாழ்த்தியும் இன்று முதலாளித்துவப் பத்திரிக்கைகள் பக்கம் பக்கமாக எழுதுகின்றன. ''ஆனால் இதே பத்திரிக்கைகள் நான்காண்டுகளுக்கு முன்பு என்னைசதிகாரனாகவும் கொலைகாரனாகவும் சித்தரித்தன. கீழ் கோர்ட்டுகள் எனக்கு விதித்த மரண தண்டனையை வாழ்த்தி வரவேற்றன'' என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளின் வேசித்தனத்தை தோலுரித்துக் காட்டுகிறார் பல்பீர் சிங்.

ஏதோ இந்த அளவுக்காவது மரணவாயிலிருந்து பல்பீர் சிங் தப்பிவிட்டாரோ என்று நாம் திருப்தியடைய முடியாது. பல்பீர் சிங்கைப் போல உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க எந்த ஏழைக் குடிமகனுக்கும் சாத்தியமில்லை. வழக்கு தொடுத்தாலும் இலவசமாக வாதாட எந்த வக்கீலும் முன் வர மாட்டார். அதிலும் போலீசார் சோடித்த கிரிமினல் வழக்கு என்றால் அலறியடித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள். ஆந்திராவில் நக்சல் பாரிப் புரட்சியாளர்கள் மீது போலீசார் சோடித்த பொய் வழக்குக்கு எதிராக வாதாட முன் வரும் வழக்கறிஞர்களை போலீசாரே மிரட்டி தாக்குகின்றனர். பல்பீர் சிங் வழக்கில் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி அவருக்காக வாதாடியது கூட, பிரபல கிரிமினல் வழக்கில் வாதாடினால் பேரும் புகழும் பெற முடியும் என்ற தொழில் நோக்கத்தில்தான்!

பல்பீர் சிங் விடுதலை செய்யப்பட்டு இரண்டு மாதங்களாகியும் இன்னமும் அவர் வீட்டைச் சுற்றி ரகசியபோலீசார் உலவுகின்றனர். வேலை பறிக்கப்பட்ட அவருக்கு மீண்டும் வேலை தருவது பற்றியோ, நிரபராதியைச் சிறையிலடைத்ததற்கு நட்ட ஈடு அல்லது நிவாரணம் தருவது பற்றியோ ராஜீவ் அரசு வாய் திறக்கமறுக்கிறது. நிரபராதியைத் தண்டித்து விட்டோமே என்ற குற்றஉணர்வு அரசிடமும்போலிசிடமும் அறவே இல்லை. மாறாக பொய் வழக்கிலிருந்து தப்பிவிட்டாரே என்ற ஆதங்கமும் ஆத்திரமும்தான் அதனிடம் பொங்கி வழிகிறது.

● மணி

## கோர்ப்பசேவின் 'ஜனநாயகம்'!

சமீபத்தில் கோர்ப்பசேவ் கும்பல் ரஷியாவில் அரங்கேற்றிய ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன்னர் கட்சியில் செல்வாக்கு பெறுவதற்காக தனது விசுவாசிகளையும் எடுபிடிகளையும் ஜனநாயக விரோதமாக திணித்துள்ள விவகாரம் இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. இப்போதைய ஆட்சிக் கவிழ்ப்பிற்கு முன் நடைபெற்ற 'வரலாற்று சிறப்புமிக்க' மாஸ்கோ மாநாட்டில் மாநாட்டுப் பிரதிநிதிகள் இம்மியளவும் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்படவில்லை.

மாஸ்கோ நகரக் கமிட்டியில் கோர்ப்பசேவ் கும்பலைச் சேர்ந்த 4 பிரதிநிதிகள்தான் ஜனநாயக முறைப்படி மாநாட்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனால் மாநாட்டில் தமது கொள்கைக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காமல் போகும் என்றஞ்சிய கோர்ப்பசேவ் கும்பலின் முக்கிய புள்ளியான மாஸ்கோ நகரக் கட்சிக் கமிட்டித் தலைவர், தமது சிபாரிசின் பேரில் மேலும் 12 விசுவாசிகளை பிரதிநிதிகளாக மாநாட்டுக்கு அனுப்பினார். இந்த வகையில்தான் ஒவ்வொரு பிராந்தியத்திலும் பிரதிநிதிகள் தேர்வு நடைபெற்றது.

இந்த மோசடியை எதிர்த்து ரஷிய பத்திரிக்கையான 'இஸ்வெஸ்தியா'வில் ஏராளமான வாசகர் கண்டனக் கடிதங்கள் வெளியாயின. கடந்த மே 28 அன்று மாஸ்கோ நகரில் புஸ்கின் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கோர்ப்பசேவின் ஜனநாயக விரோத தேர்தல் மோசடியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். தேர்தல் நடந்தபோது ஏறத்தாழ எல்லா மாநிலங்களிலும் கைகலப்பும் மோதலும் நடந்துள்ளது.

இப்படி இந்திய ஓட்டுப் பொறுக்கிகளைப் போலவே மோசடி, தில்லுமுல்லு, சதிகள் மூலம் கட்சியைக் கைப்பற்றிய கோர்ப்பசேவ் கும்பல், அதன் தொடர்ச்சியாக இப்போது ஆட்சியையும் கைப்பற்றியுள்ளது. இது தான் கோர்ப்பசேவ் பிராண்டு ஜனநாயகம்!



படிப்பகம்

www.padippakam.com



# கோர்ப்பசச்சேவின் அரண்மனைப் புரட்சி!

ஒருவர் பின் ஒருவராக கிரமமான முறையில் பதவிக்கு வருவது போல் தோன்றினாலும் உண்மையில் ரஷியாவில் அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொரு கும்பலும் ரத்தம் சிந்தாமல் ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றுகிறது. இதை மீண்டும் நிரூபிக்கும் வகையில் ரசியாவில் அக்டோபர் முதல் நாளன்று நடந்த பாராளுமன்ற (சோவியத்) அவசர கூட்டத்தில் மறைந்த முன்னாள் அதிபர் பிரஷ்னேவ் கும்பலின் எஞ்சிய விசுவாசிகள் பொறுப்புகளிலிருந்து தூக்கியெறியப்பட்டு கோர்ப்பசேவ் கும்பல் முற்றாக கட்சி மற்றும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

ரசிய அரசில் 2ம் நெம்பர் ஆசாமியாகக் கருதப்பட்ட லிகசேவ் பொறுப்புகளிலிருந்து கழற்றி எறியப்பட்டார். ரசியாவின் ரகசிய கொலைகார உளவு நிறுவனமான கேஜியி—யின் உயர் பொறுப்பிலிருந்த செப்ரிகோவ் விரட்டப்பட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக ரசிய அதிபர்குரோமிகோவும், துணை அதிபர் பியோதர் டெமிசேவும் கழித்துக் கட்டப்பட்டுள்ளனர்.

சுருக்கமாகச் சொன்னால் மறைத்த முன்னாள் அதிபர் பிரஷ்னேவ் கும்பலின் முக்கிய புள்ளிகளும் விசுவாசிகளும் ஆட்சிப் பொறுப்பிலிருந்து தூக்கியெறியப்பட்டுள்ளனர். அந்தஇடங்களை இப்போது கோர்ப்பசேவ் கும்பல் கைப்பற்றிக் கொண்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல இதுநாள் வரை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராய் இருந்த கோர்ப்பசேவ் அந்தப் பதவியோடு இப்போது நாட்டின் அதிபராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

வெறுமனே பெயரளவுக்கு கௌரவப் பதவியாக இருந்த பதவியை அமெரிக்க பாணியில் உயர் அதிகாரமுடைய பதவியாக மாற்றியமைத்துக் கொண்டு அதையும் கோர்ப்பசேவ் கைப்பற்றியுள்ளார். இதன்படி, பாராளுமன்றத்துக்கும் மேலானவராக, முடிவுகளை மாற்றவும் திருத்தவும் அதிகாரமுடையவராக உயர்ந்து, இன்று ரசியாவில் மிக உயர்ந்த அதிகாரம் படைத்தவராக கோர்ப்பசேவ் பரிணமித்துள்ளார்.

“துணிச்சலான முடிவை கோர்ப்பசேவ் எடுத்துள்ளார். ஒரே அடியில் பழமைவாத எதிர்ப்பாளர்களைக் கட்சியிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் தூக்கியெறிந்து விட்டார். ஸ்டாலினுக்குப்பிறகு மிகச் சக்தி வாய்ந்த மனிதராக இன்று கோர்ப்பசேவ் உயர்ந்துவிட்டார்” என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகள் ஏற்றிப் போற்றுகின்றன. போலிக் கம்யூனிஸ்டுகளும் எஜமான விசுவாசத்தோடு கைத்தாளம் போடுகின்றனர்.

ஆனால் கோர்ப்பசேவ் நடத்தியது அப்பட்டமான ரசிய மாடல் ஆட்சிக் கவிழ்ப்பு. ஏற்கனவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சியைக் கைப்பற்றிய கோர்ப்பசேவ் கும்பல் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குமுன் கடும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது. அதிகாரச் சுவை கண்ட மறைந்த முன்னாள் அதிபர் பிரஷ்னேவ் கும்பல் அவ்வளவு எளிதில் பொறுப்புகளிலிருந்து விலகுவதாக இல்லை. பகிரங்கமாக கோர்ப்பசேவின் புதிய கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு பெரும் கலகங்களையும் கட்டவிழ்த்து விட்டனர். எனவே தற்காலிகமாக விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தி வந்த கோர்ப்பசேவ் கும்பல் படிப்படியாக பலத்தைத் திரட்டிக் கொண்டு எதிர் தாக்குதல்தொடுக்க தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தது.

அதன்படியே, திடீர் அரசியல் பொருளாதார நெருக்கடியோ பெரும் கலகமோ, அன்னிய ஆக்கிரமிப்பு அபாயமோ எதுவுமே இல்லாத நிலையில் முறையான முன்னறிவிப்பு ஏதுமின்றி அவசர அவசரமாக மத்தியக் கமிட்டியின் சிறப்பு பிளீனத்தையும், அதைத் தொடர்ந்து பாராளுமன்றக் கூட்டத்தையும் நடத்தியது கோர்ப்பசேவ் கும்பல். எதிர்பார்த்தபடியே பிரஷ்னேவ் கும்பல் தூக்கியெறியப்பட்டு கோர்ப்பசேவ் கும்பல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. ஏறத்தாழ மூன்றரை ஆண்டு காலமாக ஆட்சியதிகாரத்தை முற்றாக கைப்பற்றுவதற்காக நடந்து வந்த ரத்தம் சிந்தா யுத்தத்தில் வென்று ரசியாவின் நவீன நெப்போலியனாக வலம் வருகிறார் கோர்ப்பசேவ். கூடுதல் ஜனநாயகம் (கிளாஸ்நாஸ்ட்) தான் எங்கள் உயிர் மூச்சு என்று மார்தட்டிக் கொள்ளும் கோர்ப்பசேவ் கும்பல் கடைசியில் ஜனநாயக விரோத முறைகளின் மூலம், சதி மூலமே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

கோர்ப்பசேவ் கும்பலின் இந்த ஆட்சிக் கவிழ்ப்பினால் மேற்கு ஐரோப்பிய பாணி முதலாளித்துவத்தை நோக்கி ரஷியா நாலு கால் பாய்ச்சலில் முன்னேறும்; மேற்கத்திய ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரம் எந்தத் தடையுமின்றி ரஷியாவை அரித்து விழுங்கும். தனியார் முதலாளித்துவம் தடையின்றி பெருகும். மீண்டும் நெருக்கடிகள் முற்றும். அதனால் தானே, கோர்ப்பசேவை ‘ஒரு தீரர்’ என்று புகழாரம் சூட்டுகின்றன, துக்ளக் முதலான முலலாளித்துவப் பத்திரிக்கைகள்!

● குமார்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-எ, பெரியார் பாதை (மேற்கு) சென்னை-600 024.

படிப்பகம்

இது ஏதோகேட்பாரற்று கிடக்கும் கற்பாறை அல்ல, இந்திரா காந்தியின் நினைவாக டெல்லியில் எழுப்பப்பட்டிருக்கும்பாறைத் தோட்டம்; சக்திஸ்தலம்.

இந்த சக்தி ஸ்தலம் அமைக்க அரசுக்கு ஆன செலவு 4 கோடி ரூபாய். இன்னும் கணக்கில் வராத அரசுதுறைகளின் இலவச சேவைகள் தனி. 4பெரும் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் ஒப்படைக்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களின் மண்ணியல்துறையும், மத்திய பொதுப்பணித் துறையும் முடுக்கி விடப்பட்டு பாறைகள் தேடும் பணிக்கு விரட்டப்பட்டன. வகை வகையான 500 பாறைகள் இந்தியா முழுவதிலிருந்தும் கொண்டு வரப்பட்டது. படத்தில் இருக்கும் கை வடிவம் கொண்ட கற்பாறை தான் சக்தி ஸ்தலத்தின் சிறப்பம்சமாம்! 40 டன் எடையும் 16 அடி உயரமும் தட்டினால் ஒலி எழும்பக் கூடிய பழுப்பு நிறத்திலான இம் மணிப்பாறை, ஒரிசா மாநிலத்தின் சுந்தர் நகர் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டது. நாட்டின்தலை சிறந்த சிற்பிகளைக் கொண்டு இயற்கையிலேயே கைச்சின்னம் போன்று உருவான பாறையாக உருவாக்கப்பட்டது. இதை சிதறாமல் டெல்லிக்கு கொண்டு வரும் பொறுப்பை, அரசுத்துறை ரூர்கெலா எஃகு ஆலை நிர்வாகம் இலவசமாக செய்தது.

இதோ, இது பீகார் மாநிலத்திலுள்ள அரசு ஆரம்ப பள்ளி! ஒன்று இரண்டல்ல, நாடு முழுவதும பல பல்லாயிரக்கணக்கான பள்ளிகள் இப்படி பொட்டல்வெளியிலும், மரத்தடியிலும், குப்பை மேட்டிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.



# இதுதான் இன்றைய இந்தியா

இந்த அவமானத்தை எல்லாம் 1990ம் ஆண்டுக்கு ஒழித்து விடுவோம் என '86ஆம் ஆண்டில் நெஞ்சை நிமிர்த்தியது பாசிச ராஜீவ் கும்பல். "கரும் பலகை நடவடிக்கை" என்று ஆரவாரமாக பெயரிட்டு ஒருபுதுத் திட்டத்தை உருவாக்கியது. குறைந்தது, அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் 2 ஆசிரியர்கள்; 50 சதுரமீட்டர் பரப்பளவுக்கு நிரந்தர கட்டிடம் என நீட்டி முழங்கியது. திட்டத்தின் இலக்கு காலம்தான் முடிந்தது. திட்டங்கள் ஆரம்பிக்கப்படவே இல்லை. முதல் தவணையாக ஒதுக்கிய 110 கோடிகள், திட்டங்கள் தயாரிக்க காகிதம் வாங்கவும், காகிதம் வாங்குவதற்கு திட்டம் போட்ட அதிகாரவர்க்கத்தின் கூலிக்கும் செலவாகிப்போனது!

தன் வாழ்நாள் முழுவதும் மக்களை ஒடுக்கி அவர்களின் ரத்தத்தை உறிஞ்சி, சுரண்டும் கும்பலுக்கு விசுவாச ஊழியம் செய்து மடிந்த பாசிச இந்திராவுக்குப் பளிங்கு பாறையில் நினைவுச் சின்னம்! உழைத்து உருக்குலைந்த உழைப்பாளி குழந்தைகள் அரை குறை படிப்புக்கே கட்டாந்தரையையும் பொட்டல் வெளியையும் தேடி நாயாய் அலைய வேண்டிய நிலை! இந்த அவமானத்தை— அவலத்தை இன்னும் எத்தனை நாட்கள்தான் அனுமதிப்பது?



படிப்பகம்